திராவிடநாடு

26—6—60 | வார வெளியீடு | விலை 16 காசு

விழிப்பு வேண்டாமோ?

பேசுவதோ தமிழ்;—அவர்
　　வாழ்க்கை உருளுவதோ தமிழ் மண்ணில்!
கூசாமல் கூறினர்;—நமக்கு
　　வாழ்வு உண்டாம் இந்தி கொண்டால்!
காசோடு வாழ்வாம்—இனி
　　கசப்பே இல்லையாம் தமிழர் வாழ்க்கையிலே!
மாசு இல்லையாம், வடவர்
　　மொழிநாற்றம் இங்கு வீசுவதாலே!

பதவிகள் தந்தோம்—தமிழ்
　　மணத்தை எங்கும் பரப்புவர் என்று!
உதவிகள் செய்தோம்—நம்
　　அன்னை ஈன்ற நம்மவர் என்றே!
புதல்வர்கள் நாங்கள்!—ஆகாதாம்
　　எங்கள் அன்னை! கூசாமல் கூறிவிட்டார்;
பிதற்றும் குழுவினர்;—மதங்
　　கொண்ட தில்லிக்கு அடிமைப்பட்டோர்!

புகுத்தினர் பள்ளியிலே—ஐயோ!
　　கொதிக்கிறது தமிழ் குருதி இங்கே
தகுதி என்றனரே!—அந்தோ!
　　மிதிக்கிறது பிஞ்சு உள்ளங்களை அங்கே!
மிகுதி வேண்டுமாம்;—அமைச்சர்
　　முழுமூச்சோடு செய்கிறார் வேலைகளை!
பகுத்தறிவு கொண்டோரே!—இனியும்
　　விழிப்பு வேண்டாமோ பச்சையர் ஆட்சியிலே?

தீய்ந்த ரொட்டி!

ஆங்கிலம்:
பி. ஐ. மாக்ரா.
தமிழாக்கம்:
பொ. செல்வநாதன்.

பாத்திரங்கள் :

இடையன், இடையனின் மனைவி, எட்கார் இடையன் மகன். வயது 10. அரசன் ஆல்பிரட், இரு பிரபுக்கள் மன்னனுக்கு உதவியாகப் போர்புரிந்து அவனோடு தப்பி வந்தவர்கள்.

காலம்:

கி. பி. 878. (பதினொரு நூற்றாண்டுகட்கு முன்) குளிர்காலம்.

இடம்:

இங்கிலாந்தில் ஓர் சிறு நாடாக விளங்கிய சாமர்செட்டில் அத்தேனே என்னும் கிராமம்.

காட்சி:

[இடையனின் குடிசையில் விறகுக் கட்டைகளால் ஆன நெருப்பு நிறைந்த அடுப்பு, மத்தியில் இருக்கிறது. சுற்றிலும் சமையல் சாமான்கள், வலது பக்கம் ஒரு பெஞ்சும், இடது பக்கம் ஒரு ஸ்டூலும், பின்பக்கம் ஒரு மேசையும், இடது பக்கத்திலேயே வாசலும் இருக்கின்றன. இடையனின் மனைவி பெஞ்சில் உட்கார்ந்துகொண்டு பின்னல் வேலை செய்துகொண்டிருக்கிருள். பின்னுகின்ற கம்பளி இழைகள் அவளுடைய முழங்கைக்குக்கீழ் தொங்குகின்றன. எட்கார் என்னும் பையனும் அவன் தந்தையாகிய இடையனும் உள்ளே வருகின்றார்கள். அவர்கள் குளிரால் உதறிக்கொண்டும், கைவிரல்களைத் தேய்த்துக்கொண்டும் வருகின்றனர்.]

இடையன்:- குளிர், மிகக்குளிர் மனையாளே.

இடையனின் மனைவி:- உம்...... கோடை எப்போதும் நீண்ட நாட்களுக்குப் பின்தான் வரும். அதைப்பற்றிப் பேசுவதால் குளிர்காலம் துரிதமாய்ப் போய் விடாது.

இடை:- (ஸ்டூல் மேல் உட்கார்ந்து கொண்டு அனலால் குளிர் காய்ச்சுகிருன். அப்போது எட்கார் காய்ந்த புல்லைக் கொண்டு வந்து நெருப்பில் போடுகிருன்.) கொஞ்சம் புல்தான் இருக்கிறது. புதிய புல் முளைக்கும் வரை நம் மாடுகளுக்குத் தீனி வேண்டுமே.

இ—மனைவி:- அது புதியது அல்ல; என் விருப்பப்படி நான் செய்தால் அதிகமான ஆடுமாடுகள் கொல்லப்பட்டுப் பதப்படுத்தப்படும். ஒவ்வொரு கடுமையான குளிர்காலத்திலும் மிகுதியான உயிரினங்கள் நம் கையாலேயே கொல்லப்படுகின்றன அல்லவா? அதனால் அதிகமான தீனி வைத்திருக்கவேண்டியதில்லை... அதிருக்கட்டும் — மந்தையோ, கிடையோ, உப்பிட்ட மாமிசமோ, பாற் கட்டியோ டென்மார்க் நாட்டினர் வந்தால் எல்லாவற்றையும் இழக்க நேர்ந்துவிடும்— அவர்களோடு எதிர்த்து நிற்கக் கூடியவன் யார் உள்ளான் இந் நாட்டில் — உன் விருப்பப்படி நான் இருந்தால்...

இடை:- (பொறுமையிழந்து, ஆனால் பெருந்தன்மையுடன்) ஓ...ஐயோ ஐயோ உளறுதே நிறுத்து பெண்ணே நிறுத்து, சும்மா பிதற்றாதே. உன் விருப்பப்படியிருந்தால் நீ இந்த ஊருக்குத் தலைவியாகியிருப்பாய். ஆனால் ஆகவில்லை—அதற்காக நன்றி.

இ — மனைவி:- (மரியாதையின்றி) ஆமாம் உளறுகிறேன், மெய்யாகவேதான் உளறுகிறேன். மாடுகளெல்லாம் சிதறி வந்து அங்கே நம் வேலியை நாசம் செய்யும்போது இங்கே நெருப்பு அனலண்டை வந்து உளறிக்கொண்டிருப்பது யார்? (இடையன் எழுந்து நிற்கிருன்) நம்முடைய மாடுகளால் மாற்றார் சொல்லும் வன்சொல்லைக்கேட்க நேர்ந்துவிடுகிறது. (பின்னல் குச்சியால் அவனைக்குத்துகிருள்) போ வெளியே! கோழிகளுக்குத் தீனிபோடவேண்டும், கம்பளியால் பின்னல் செய்யவேண்டும்; தயிர் கடையவேண்டும்; ரொட்டி சுடவேண்டும்; இத்தனையும் நான் செய்யும்போது அவைகளைக் கவனிக்காமல் சோம்பேறி மனிதக் கூட்டத்தில் சேர்ந்தவன் போல் பிதற்றிக்கொண்டிருக்கிருய். (இடையன் வேகமாக வெளியே போகிருன். அவன் மனைவி தொடர்ந்து முணுமுணுத்துக்கொண்டே பின்னல் வேலையை நிறுத்திவிட்டு, மாவும் தண்ணீரும் எடுத்து மேசையருகில் அமர்ந்து, கலந்து பிசைந்து கொண்டிருக்கிருள்.) ஏய் எட்கார்! நம் வேலியண்டை போய் அதைச் சரிப்படுத்து. பன்றிகளெல்லாம் வந்து முட்டித் தாண்டி அதைக் கெடுத்துவிடும். அந்தப் பன்றி மேய்ப்பவர்களிடம் சரியாகக் கவனித்துக் கொள்ளும்படி சொல்.

எட்:- பன்றி மேய்ப்பவரா அம்மா? அவர் டென்மார்க்கியரோடு போர் புரியச்சென்று விட்டாரே, மறந்துவிட்டாயா? அவருடைய தந்தை நோயுற்றிருக்கிருர். அவர் மனைவிதான் இப்போது பன்றிகளைக் கவனித்து வருகிருள்.

இ—மனைவி:- ஆமாம். அப்படியானல் அவளிடம் போய்த் துரிதமாகச் சொல். உம்... அடுத்த விளைச்சலுக்கு அந்தப் பெண் தான் வயலை உழவேண்டும் போலிருக்கிறது. அடடா என்ன இந்த நாடு இங்கிலைக்கு வருகிறதே!... என் விருப்பப்படி நான் இருந்தால்...(எட்கார் வேகமாய் வெளியே ஓடுகிருன்.) எட்கார் திரும்பி வா! சொல்வதை முடிக்கவில்லை...

எட்:- (திரும்பி உள்ளே வருகிருன்) அம்மா, அம்மா, அங்கே ஓர் மனிதன் (சுட்டிக்காட்டுகிருன்) நம் சதுப்பு நிலத்தில் வந்து கொண்டிருக்கிருன். அவன் எச்சரிக்கை ஏதும் செய்யவில்லை!

இ—ம:- ஏய் போ, உன் வேலையைக் கவனி—இங்கே பிதற்றிக் கொண்டிருக்காதே. அதைப் பற்றி எனக்கென்ன அக்கறை.

எட்:- ஆனல் அவன் இங்கே வருகிருன் அம்மா. களைத்துப் போய், அடிக்கப்பட்ட மிருகம் போல் தோன்றுகிருன். போர் செய்யும் மனிதனைப்போல் காணப்படுகிருன்—ஒருவேளை—அவன் ஓர் டச்சுக்காரனே! கலகக் கூட்டத்தினனே' கலகக்காரருக்கு இடம் கொடுக்கமாட்டாயல்லவா? நானும் இங்கேயிருந்து பார்க்கட்டுமா அம்மா?

இ—ம:- இல்லை — உன் வழியே போ. (எட்கார் மெதுவாக வெளியே போகிருன்.) என்னல் கூடியதை நான் செய்வேன். டச்சுக்காரனே, கொள்ளைக்காரனே எவனைலும் புகலிடம் தர மறுக்கமாட்டேன் நான்.

(4-ம் பக்கம் பார்க்க)

முடியாத ஒன்றல்ல

மலர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (26—6—60) தனிப் பிரதி 16-காசு | இதழ் 50

"சென்னை மாநில வானொலி நிலையங்களில் தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்பது அரிதாகிவிட்டது."

"வானொலி அதிகாரிகள் மக்களின் விருப்பத்திற்கிணங்க நடந்தால், இலங்கை வானொலியைத் திருப்பி வைத்துக் கேட்க நேரிடாது."

சென்னை மாநிலத்திலுள்ள வானொலி நிலையங்களில், தமிழ் மக்களின் நலம், விருப்பம், தேவை எதுவுமே கவனிக்கப்படுவதில்லை; வறிதே, கடமையை மறந்து, காலத்தைக் கவைக்குதவாததாக்கும் நிகழ்ச்சிகளையே வானொலியில் இடம்பெறச் செய்து வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டை நாம் நீண்டகாலமாகவே கூறி வருகிறோம்.

ஆனால், சென்னை மாநில வானொலி நிலைய அதிகாரிகள், நிகழ்ச்சிகளை மாற்றும் அதிகாரம் தங்களுக்கில்லை; எல்லாம் டில்லியிலுள்ள அதிகாரிகளிடமேயுள்ளன என்ற சமாதானத்தைக் கூறிவிடுகின்றனர்.

எந்த ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமானாலும், அதற்குரிய அதிகாரம் டில்லியின் பிடியில்தான் உள்ளது. இதனை நாம் அறிவோம்; இதுபற்றி நாம் அறிந்திருப்பதைவிட அதிகமாக அறிந்து, அதனால் அவதிப்பட்ட ஒருவர்தான் இப்போது முழு இந்தியக் காங்கிரசுத் தலைவராக இருப்பவர். இவர் சில மாதங்களுக்கு முன், சென்னைக்கு வந்திருந்த சமயம் கார்ப்பரேஷன் ஏற்பாடு செய்த கூட்டம் ஒன்றில் பேசும்போது,

> "எங்கோ வெகு தொலைவில்—1500 கல் தொலைவுக்கு அப்பால்—டில்லியில் அமர்ந்திருப்பவர்களால் இங்குள்ள குறைகளை எப்படிக் கண்டறிய முடியும்? அவர்கள் தயவுக்காக நாம் ஏன் காத்துக்கிடக்கவேண்டும்?"

என்று, இன்னும் பலப்பல, நாம் கூறாத—கூறத் தயங்கும் காரணங்களை எடுத்துக்காட்டி டில்லியின் ஆதிக்கப் போக்கை மிகமிக வன்மையாகக் கண்டித்துப் பேசினார். ஆனால், இப்போது அவர் அவ்விதம் பேசமுடியாது. அவர் இப்படியெல்லாம் பேசிக்கொண்டு போவது பெரும் ஆபத்தாக முடியுமென்று கருதியோ என்னவோ, உடனே அவரை ஊமையாக்கிவிட்டது டில்லி அரசு.

> "இனி நீர்தான் எங்கள் தலைவர். காங்கிரஸ் இனி நீர் காட்டுகிற வழியில்தான் செல்லும். எனவே நீர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்"

என்று கூறி அவரைத் தலை நிமிர்ந்து பேச முடியாத நிலைமை உண்டாக்கிவிட்டது.

இப்போது அவர் டில்லி அரசு செய்யும் எதனையும் எடுத்துக்காட்டி இது தவறு என்று கூறமுடியாது—கண்டிக்க முடியாது.

இதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு.

இப்போது அகாலிகள் நடாத்தி வரும் தனிப் பஞ்சாப் இராச்சியக் கிளர்ச்சி சிறிதும் அனுமதிக்க முடியாத ஒன்று என்று தன்னை மறந்து—தான் காங்கிரசுக்குத் தலைவன் என்ற ஒன்றை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு, சென்னைக் கார்ப்பரேஷன் கூட்டத்தில் டில்லி சர்க்காரின் ஆதிக்கப் போக்கையும் அதிகார வெறியையும் கண்டித்துக் காரசாரமாகப் பேசியதையும் அடியோடு மறந்து, பஞ்சாபிகள் தனி இராச்சியம் கேட்பதா? இது ஆகுமா? அடுக்குமா? இனியும் இப்படிப்பட்ட பிரிவினைக் கிளர்ச்சிகளுக்கு இடமளிக்கலாமா என்று வீராவேசத்தோடு பேசுகிறார்.

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடுமென்பார்களே, இது நமது மதிப்பிற்குரிய காங்கிரசுத் தலைவர் சஞ்சீவியாரிடம் இல்லாமல் போய்விட்டதோ என்று ஐயப்படுமளவுக்கு அவர் தம்முடைய போக்கையும் நோக்கையும் இப்போது மாற்றிக்கொண்டுவிட்டார் என்பதை எண்ணும்போது நமக்கு வியப்பும், வேதனையும், வெட்கமும் கலந்த நிலைமையே உண்டாக்குகின்றது. பதவி, இந்த அளவுக்கா ஒருவரின் அடிப்படை இலட்சியத்தையே மாற்றிவிடும் ஆற்றல் பெற்றுவிடுகிறது என்றுகூட எண்ணத் தோன்றுகிறது—போகட்டும்.

12—6—60-ல் சேலம் வானொலி நிலைய ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தோழர்கள், டி. எஸ். பட்டாபிராமன் எம். பி. அவர்களும், டி. எம். காளியண்ணன் எம். எல். ஏ. அவர்களும்; நாம் தலையங்கத்தின் தொடக்கத்திலே குறிப்பிட்டுள்ள கருத்துக்களைத் தெரிவித்து, சென்னை மாநில வானொலி நிலையத்தார் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் செய்து வரும் இன்னல்களையும் இடையூறுகளையும் எடுத்துக்காட்டி வேதனைப்பட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் எம். பி-க்களும், எம். எல். ஏ-க்களும் கண்டிக்குமளவுக்கு டில்லியின் ஆதிக்கப்போக்கு இருந்துவருவதை எடுத்துக்காட்டவே இதனை இங்கு குறிப்பிட்டெழுதுகின்றோம்.

12—6—60-ல் வெளிவந்த 'ஆனந்தவிகட'னும் சென்னை மாநில வானொலி நிலையத்தார் செய்துவரும் ஆகாத செயல்களை எடுத்துக்காட்டி ஒரு தலையங்கமே தீட்டியுள்ளது.

வானொலி என்ற அழகான தமிழ்ப்பெயரை ஆகாஷ்வாணியாக்கியதிலிருந்து "வானொலி" வெளியீட்டை அச்சிடும் அலங்கோலம் வரை அங்கு நடைபெறும் ஒவ்வொரு ஊழல்களையும் எடுத்துக்காட்டி, இனிமேலாவது வானொலி நிலையத்தார் தங்கள் தவறுகளைத் திருத்தியும் குறைகளையும் போக்கியும், தமிழின் சிறப்பும் தமிழ்மக்களின் நலமும் பேணும் வகையில் நடந்துகொள்ள முயல்வார்களா என்று கேட்டிருக்கிறது—ஆனந்தவிகடன்,

எடுத்ததெற்கெல்லாம் டில்லியை நோக்கி நிற்கும் இவர்கள் இதை எங்கே செய்யப்போகிறார்கள்-கவனிக்கப்போகிறார்கள் என்று எண்ணுகிறீர்களா. பொறுத்திருந்துதான் பார்ப்போமே! அல்லது இதற்கும் ஒரு போராட்டம்—பொதுவான போராட்டம்—தமிழர்கள் எல்லோரும் ஒன்றுகூடி நடத்தும் போராட்டம் நடைபெற்றுத்தான் ஆகவேண்டுமென்று டில்லி அரசோ அல்லது சென்னை அரசோ விரும்புமானால், அதனையும் செய்து வெற்றி காணத் தமிழ்ப் பெருமக்கள் தயங்கார் என்பதை மட்டும் உறுதியாகக் கூறுகிறோம்.

அன்று—1938-ல், அன்பர் ஆச்சாரியாரால் புகுத்தப்பட்ட கட்டாய இந்தித் திட்டத்தை முறியடித்து வெற்றி கண்ட தமிழினம் தூங்குவதாக எண்ணிக்கொண்டு, மீண்டும் இந்தியைக் கட்டாயபாடமாக்கும் முயற்சியில் வெற்றிகண்டுவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்கும் டில்லி அரசின் ஆகாத போக்கைக் கண்டிக்கும் முறையில்,

இத்திங்கள், 18 19-ம் நாட்களில் பவானியை அடுத்த குமாரபாளையத்தில் கூடிய தி. மு. க பொதுக்குழு கட்டாய இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்த முடிவு செய்திருக்கிறது.

இந்த நிலையில் 'ஆகாஷ்வாணி'யை வானொலியாக மாற்றுவது தமிழ் மக்கள் நினைத்தால், முடியாத ஒன்றல்ல என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்னுள்ளம் அத்தகைய கடினமானதல்ல. (கதவில் தட்டும் சத்தம் கேட்கிறது. மன்னன் ஆல்பிரட் வாசலில் நிற்கிறான். அவன் சட்டைகள் தூசுபடிந்து இருக்கின்றன. மிகவும் களைத்திருக்கிறான்)

ஆல்:- வணக்கம் தாயே.

இ—ம:- (துடுக்காக) உனக்கு என்ன வேண்டும்?

ஆல்:- புகலிடமும், குளிர்காயும் நெருப்பண்டை அமர ஓர் இடமும்தான்.

இ—ம:- உள்ளே வா. (அவன் உள்ளே வந்து பெஞ்சில் அலுத்து உட்காருகிறான்.) வெகுதூரம் பயணம் செய்தாயா?

ஆல்:- ஆம் அம்மா வெகுதூரம்—குன்றுகள் மேலும், காடுகளின் இடையிலும் உங்கள் சாமர்செட் மைதானங்களிலும். இந்தச் சதுப்பு நிலத்திலும் திரிந்து வந்தேன்......உம்...... இந்த இடம் என்னவென்று அழைக்கப்படுகிறது?

இ—ம:- அத்தேனே என்பதுதான் இந்த ஊரின் பெயர். நீ வேசெக்ஸ் நாட்டினன் போல் பேசுகிறாயே, அப்படியானால் நீ ஓர் பகைவன் இல்லையா?

ஆல்:- இல்லை—நான் பகைவன் அல்ல அம்மா.

இ—ம:- (மாவைப் பிசைந்து ரொட்டி சுடும் இரும்புத் தகட்டில் ரொட்டிகளாகத் தட்டிக்கொண்டு) இன்றிரவு என் கணவன் ஒப்புக்கொண்டால் இங்கேயே நீ உறங்கலாம். ஆனால் நாங்கள் ஏழைகள், பாதிக்கப்பட்டவர்கள்; இக்காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். டென்மார்க் நாட்டினர் வேசெக்ஸை அழிக்க ஆரம்பித்ததிலிருந்து அரசர் எங்கள் நாட்டு ஆண்களை எல்லாம் போருக்கு அழைத்துச் சென்றுவிடுகிறார். தானியப் பயிருக்குப் பதிலாகக் களைகளே எங்கள் வயல்களில் அதிகமாகப் பெருகியுள்ளன. ஆகவே எங்களுக்கு உணவுப் பண்டங்களும் குறைவுப்பட்டுக்கொண்டே போகின்றன. நீ எங்களோடு வசிக்க விரும்பினால் அடுத்த உழவு வேலையை நீ செய்யவேண்டும்,

ஆல்:- உம். நிச்சயமாய்ச் செய்வேன்.

இ—ம:- (ரொட்டி சுடும் தட்டை அடுப்பில் வைக்கிறாள்) நான் போய் என் கணவனைப் பார்த்து வருகிறேன், அவர் உன்னோடு பேசவேண்டும். இந்தப் பலகாரத்தைக் கவனித்துக்கொள். தீய்ந்துபோக விட்டுவிடாதே; நாம் சாப்பிட இருக்கும் ரொட்டிகள் இவையேதான். உனக்கும் இந்த உணவு அன்றி வேறில்லை. ஒரு பக்கம் பழுப்பு நிறமானதும் பத்திரமாகத் திருப்பிப்போடு. உம், என்ன?

ஆல்:- ஆகட்டும் அம்மா. (அவள் வெளியே போகிறாள்—நீண்ட பெருமூச்சு விடுகிறான் ஆல்பிரட் மன்னன்) பரிதாபத்துக்குரிய உயிர். இந்த நாட்கள் என் ஏழை ஆங்கில மக்களுக்கு நிச்சயம் இருள் சூழ்ந்துதான் இருக்கின்றன. இருப்பினும் இப்போதும்கூட அவ் விருளைப் போக்கும் ஒளியைக் காண்பேன் என நம்புகிறேன். ஒரே ஒரு... (எட்கார் ஊதல் ஊதிக்கொண்டும் வாசலுக்கு வெளியே ஆல்பிரட்டைக் கதவண்டை கவனித்துக்கொண்டிருந்தும் தனக்குள் முணுமுணுத்துக்கொண்டும் உள்ளே வருகிறான். ஆச்சரியத்தில் மூழ்கினவனாயிருக்கிறான்.)

எட்:- யார் நீ? ஒரு பாடகனா? அல்லது சேனை வீரனா?

ஆல்:- (புன்முறுவல் புரிகிறான்) இரண்டும். நான் ஓர் பாடகனைப் போல் பாடுவேன். சேனை வீரனைப்போல டச்சுக்காரரை எதிர்த்துப் போரும் புரிவேன். நான் சொல்வதுபோல் செய்தால் உனக்காக ஒரு பாட்டுப் பாடுவேன். அந்தத் தாழ்ந்த சதுப்பு நிலத்தில் மேட்டு நிலமும்—நீரோடு கூடிய புல்தரையும் கலக்கும் இடத்துக்குப்பின் பக்கம் உள்ள கோரைப் புல் புதரில், இரண்டு மனிதர் மறைந்துகொண்டிருப்பார்கள். அவர்களை இங்கே வரச்சொல்.

எட்:- (கடுகடுப்பாக) ஏன் நான் போகவேண்டும்? நீ யார்?

ஆல்:- (எழுந்து கதவுபக்கம் சுட்டிக்காட்டி) ஒருவர் கட்டளையிட்டால் கீழ்ப்படியவேண்டும். (எட்கார் வெளியே போகிறான். ஆல்பிரட் சிறிதுநேரம் நின்று பல எண்ண அலைகளால் மோதப்பட்டவனாக அறையில் உட்கார்ந்து — கற்பனையில் திட்டங்கள் தீட்டித் தரையில் அதைப் பற்றித் தன் ஈட்டியால் வரைந்துகொண்டிருக்கிறான்) ஆ! என்ன நான்! இப்படியே சிந்தித்துக்கொண்டிருப்பது வீண்வேலை. வாரத்துக்கு வாரம் டச்சுக்காரர்கள் — முன்னேறிக்கொண்டே வருகின்றனர். என் நாடு சிறுத்துக்கொண்டே போகின்றது. நிலம் தரிசாகப்போகின்றது. என் மக்கள் அழிக்கப்பட்டுப் போகின்றனர். எப்போதும் இந்த யுத்தம் நிகழ்ந்தவாறேயிருக்குமா? நான் என்ன செய்வேன்......இப்போது நாங்கள்! நானும் என் படையதிகாரிகளும், மற்றவர்களும் குத்ரமையும் அவ

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

26-6-60

தம்பி!

"தாயகத்தை விட்டுப் பிரியப்போகிறேன், நாளைய தினம், என்று வைத்துக்கொள்ளுவோம். அந்த நேரத்தில், நாட்டு மக்களுக்கு என்ன தந்துவிட்டுச் செல்கிறீர்—நாட்டவருக்குத் தாங்கள் அளித்திட விரும்பும் கடைசிச் செய்தி யாது? என்று என்னை வினவிடின், **அயரிஷ் இனத்தவராகத் தொடர்ந்து வாழ விரும்பினால், அயரிஷ் மொழியைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்**—என்றுதான் கூறிச்செல்வேன்.''

பிரிட்டிஷ் பிடியிலிருந்து தாயகத்தை — அயர்லாந்து நாட்டை — மீட்டிட, அரும்பாடுபட்ட, வீரன், அகில உலகு பாராட்டத்தக்க ஆற்றல் மிக்கோன், டிவேலரா இதுபோலக் கூறினன்.

வல்லமை மிக்கவர்கள் இந்த பிரிட்டிஷார்! அவர்களின் படை பலம், பயமூட்டுவதாக இருக்கிறது; எதிர்ப்போரைக் கொன்று குவிக்கின்றனர்; நாடே நாசப படுகுழியில் தள்ளப்படுவதாயினும் சரி, எங்கள் ஆதிக்கத்தை மட்டும் விடமாட்டோம் என்று கொக்கரிக்கின்றனர்; கொக்கரிப்பது மட்டுமல்ல, கூசாது கொடுமை பல செய்கின்றனர்; இவர்களை எப்படி விரட்டுவது, வீழ்த்துவது? தாயகத்தை எங்ஙனம் விடுவிப்பது என்று, மக்கள் மருண்டுகிடந்தபோது, 'சாகத் துணிந்திடின், நாட்டினரே! நாடு வாழும்! வாழ வேண்டுமே என்று அலைந்திடின், நாடு சாகும்!'' என்றுரைத்து, வீர உணர்ச்சியை ஊட்டி, மக்களைத் திரட்டி, விடுதலைப்போர் நடாத்தி, வெற்றிபெற்ற மாவீரன, டிவேலரா. அந்த விடுதலைவீரன, கூறுகிறான், **மொழி காப்பாற்றப்படவேண்டும் இனம் அழிந்துபடாமலிருக்க வேண்டுமானால்**, என்று.

ஆமாம்' உண்மைதானே அது. ஒவ்வோர் இனத்துக்கென ஒவ்வோர் மொழி இயற்கையாக அமைந்திருக்கிறது. அந்த மொழி, 'வாழ்க்கை வழி'யை அந்த இன மக்களுக்கு, அமைத்துத் தருகிறது. ஓராண்டு ஈராண்டல்ல, பல தலைமுறைகளாகச், சிறுகச் சிறுகச் சமைக்கப்பட்டுக், கூட்டாகி, ஒரு பேருரு ஏற்பட்டுவிடுகிறது. அந்த மக்கள், உலவும் நாடு, வேட்டையாடி மகிழ்ந்திடும் காடு, நீந்தி விளையாடும் ஆறுகள், உழுது பயன்காணும் வயல்கள், உழைப்புடன் மதி நுட்பத்தை இழைத்திடும் தொழிலிடங்கள், குலவி இன்புறும் மனைகள்—இங்கெலாம், எண்ணங்களை, எடுத்துக் கூறிக் கூறியும், பிறர் கூறிடக் கேட்டும், கலந்துரையாடியும், கருத்துகளை உருவாக்கி, பிறகு அதனைக் காப்பாற்றிடவும், வளர்த்திடவும், வழிவகை கண்டறிகின்றனர். இந்தச்

ஆணை பிறந்தது.....!

சீரிய செல்வத்தை மக்கள், பெற உறுதுணையாக நிற்பது அவர்க்கென அமைந்த மொழி. எனவேதான், மொழி, என்பது வாழ்க்கை வழியினை அமைத்தளிக்கிறது என்று அறிவாளர் கூறுகின்றனர்.

தட்பவெட்ப நிலைக்கேற்ப, மொழி, உருவாக்கப்படுகிறது.

பலப்பல நூற்றாண்டுகளாக, ஒரு குறிப்பிட்ட மக்கட் தொகை, அந்த மொழி மூலம், தங்கள் எண்ணங்களை எடுத்தியம்புவதாலும் கேட்டுப் பயன் பெறுவதாலும், கருத்துகள் உருவாகின்றன. அந்தக் கருவூலம், அந்த இனம், தேடிப்பெற்றது, பிறகு உலகுக்கு அளிப்பதுமாகும்.

இதனை அறிந்ததால்தான், மொழி, இனம், பண்பாடு, என்பவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்கின்றனர்.

மொழி உணர்ச்சி ஒரு இன மக்களுக்கு உயிரூட்டம் தருகிறது.

அந்த இனத்துக்கென அமையும், தனி இயல்புகள், சிறப்புகள், அந்த மொழிவழி நின்று பெற்றது. எனவே, அந்த மொழியை இழந்துவிட்டால், அந்தத் தனி இயல்புகள், சிறப்புகள், மங்கி மடிந்துபோகும், அல்லது வேறு பிறவற்றுடன் கலந்து, உருவம் கெட்டுப், பலன் பாழ்பட்டுப் போய்விடும். இதனை நன்கு ஆய்ந்தறிந்தவர்களே, எந்த ஒரு இனமும், தன் தாய் மொழியினை அழிந்துபடவிடக்கூடாது, என்று கூறினர்.

அயர்லாந்து, பிரிட்டிஷ் பிடியில் இருந்தது; கேடுபல சூழ்ந்தன; வறுமை கொட்டிற்று, பஞ்சம் தலைவிரித்தாடிற்று; உழவு அழிந்தது; தொழில் நசித்தது; வாணிபம் பாழ்பட்டது.

எனின், எமக்குச் சோறுவேண்டும்! வேலை வேண்டும்!! என்று அயர்லாந்து நாட்டுமக்கள், கேட்டனரோ எனின், இல்லை. எமக்கு எமது நாடு வேண்டும்! நாட்டு ஆட்சி எம்மிடம் இருக்கவேண்டும்! என்றுதான் கேட்டனர். ஏனெனில், வேற்றோர் நாட்டின் பிடியிலிருக்கும்போது பசியும் பஞ்சமும் பல்வேறுவிதமான கொடுமைகளும் தாக்குவது மட்டுமல்ல, இன இயல்பு அழிக்கப்பட்டுப் போகிறது! அந்த இன இயல்பு அழிந்துவிட்டால், பிறகு என்றென்றும் நிமிர்ந்து நின்று, உரிமையைக் கேட்டிடும் துணிவே அற்றுப்போய்விடும். வயிற்றுக்குச் சோறு மட்டும் கிடைத்தால் போதும், என்ற விதமான நிலை ஏற்பட்டுவிடும்.

தம்பி! கொள்ளும் புல்லும் நிரம்பத் தந்திட்டாலும், காளை, கட்டு அவிழ்த்துக்கொண்டு, தன்னிச்சையாக ஓடத்தான் துடிக்கும்; பார்த்திருக்கிறாய் அல்லவா! வயிறு நிரம்பிவிட்டது, இனி நமக்கு என்ன கவலை என்று இருந்துவிடாது. எவனோ, கட்டிப் போட்டு வைத்திருக்கிறான்; இந்தக் கயிறு அளவுக்குத்தான், நாம் உலவ முடிகிறது; ஏன், கட்டுண்டு கிடக்கவேண்டும்; நம்மைக் கட்டிப்போட்டுவிட்டு, இவனென்ன நமக்குப் புல்லும் கொள்ளும் தருவது; நமக்கென்ன, நமது தேவைக்குப் போதுமான தீனியைத் தேடிப் பெற்றுக்கொள்ள ஆற்றல் இல்லையா! எவ்வளவு பசுமை நிரம்பிய இடங்கள் உள்ளன. அங்கெலாம் ஓடித்திரிந்து, தீனி தின்று மகிழத் தெரியாதா. கட்டிப் போட்டுவிட்டானே!—என்று கூறுவதுபோலக், காளை, துள்ளுகிறது, நெம்புகிறது, வாலால் அடித்துக் காட்டுகிறது, காலால் தரையைக் கிளறுகிறது, கிட்டே சென்றால் முட்டித் தள்ளவே வருகிறது அல்லவா?

அந்தக் காளையே, கிழடு தட்டியதாகிவிட்டால், என்ன செய்யக் காண்கிறாய்? போட்டதைத் தின்றுவிட்டு, அசைபோட்டுக்கொண்டு கிடக்கிறது; தட்டித் தட்டித்தான், எழுந்தே நிற்கச் செய்ய முடிகிறது. காளைப் பருவத்து முடுக்கு மடிந்துபோய் விடுகிறது. நமக்கு இனி இதுதான் கதி! என்ற தீர்மானத்துக்கு வந்துவிடுகிறது.

ஆதிக்கத்தைப் புகுத்துவோர், விடுதலை உணர்ச்சி வீறுகொண்டு எழுந்திடும் வேளையில், கட்டிப்போட்டோ, வெட்டிச் சிதைத்தோ, தடுத்துவிட்டால், பிறகு கிழடுதட்டிய மாடு பெற்றிடும் இயல்புபோல, அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் ஆகிவிடுவர்! போட்டதைத் தின்றுவிட்டு, சொல்வதைச் செய்துகொண்டு, கிடப்பர்!—என்று எண்ணுகின்றனர்.

ஆனால், 'மொழி' இருப்பதால்தான் எத்தனை எத்தனை காலம், ஆதிக்கக்காரன், தன்னிடம் உள்ள எல்லாவிதமான படைக்கலன்களையும் கொண்டு அடக்கி ஒடுக்கி வைத்தாலும், அடக்கி வைக்கப்பட்ட மக்கள், விடுதலை உணர்ச்சியை அடியோடு இழந்து விடுவதில்லை. விடுதலைப்போர் தொடுத்திடும் துணிவு பிறவாமலிருக்கக்கூடும்—ஆனால் அந்த உணர்ச்சி; அழிந்துபடுவதில்லை. மொழிதான் அதற்குக் காரணம்.

எண்ணங்களை வெளிப்படுத்திக்கொள்ள, மனதிற்பட்டதை எடுத்தியம்ப, நமது கதி இதுதானா என்றென்றும் என்று கேட்டிட, இவ்விதமா நமது முன்னோர்கள் இருந்தனர் என்று பேச, இடுக்கண் வந்த காலை அவர்கள் யாது செய்து இன்னலைப் போக்கிக்கொண்டனர் என்பது குறித்துக் கலந்துரையாட, மொழி பயன்படுகிறது.

அவ்வப்போது தோன்றும், எண்ணங்களைமட்டும் பெறுவது போதும் என்றால் எந்த மொழியைக் கற்றுக்கொண்டாலும், அம்மொழியில் பேசலாம்; போதும். ஆனால், விடுதலை உணர்ச்சிபெற, அவ்வப்போது தோன்றும் உணர்ச்சிமட்டும் போதாது; அடிமைப்படுவதற்கு முன்பு, உரிமை பெற்றவர்களாக இருந்தபோது, உலகம் மெச்ச வாழ்ந்தபோது, அந்த மக்களின் முன்னோர்கள், எங்ஙனம் இருந்தனர் என்பது தெரியவேண்டும்; அது குறித்துப் பேசவேண்டும்; பாரதியார் கூறியபடி, அப்போதுதான் 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே!' என்ற நிலை கிடைக்கும். அந்த நிலையை அவரவர் தத்தமது தாய்மொழி மூலமாகவே பெறமுடியும். எனவே, தாய்மொழி காப்பாற்றப்படவேண்டும்.

என்ன அண்ணா! இது குறித்து இத்துணை விளக்கம் தேவையா? எவர் அறியார் இதனை! மந்தமதியினனும் மறுத்திடமாட்டானே! மொழியன்றோ, ஒரு இனத்தின் விழி! அதனை இழந்திட எந்த இழிமகனும் எண்ணங்கொள்ளமாட்டானே! — என்று கேட்பாய்,

கடைசிச் செய்தி தருவதானால், அயர்லாந்து வாழ அயரிஷ் மொழியைக் காத்து நில்லுங்கள், என்று திவேலரா கூறியதை, நீ உவகை பொங்கிடும் நிலையில் ஏற்றுக்கொள்ளுவாய்,

என்பதை நான் நன்கு அறிவேன். தம்பி! அந்த ஆற்றல்மிக்கோன் கூறிய அறிவுரையை, மறுத்திடக் கூடப் போமோ என்று நீ, கேட்பாய் என்பதையும் அறிவேன். ஆனால் மொழியைக் காப்பாற்று, அப்போதுதான், உன்நாடு உன்னுடையதாகவும், உன்னிடமும் இருக்கும், என்று டிவேலரா கூறினாரே, அதுபோன்ற உணர்ச்சிமிகு அறிவுரையை எள்ளிநகை யாட, எதிர்த்துப் பேசிட, ஒரு மகானுபாவர், இருக்கிறார், நமது மண்ணில். இங்கா? என்கிறாயா? ஆமாம் தம்பி! இங்குதான்! ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இணையற்ற இலக்கியம் சமைத்தனரே, இதே இடத்தில்தான், இதே தமிழகத்தில்தான். இப்போதா? என்கிறாயா? ஆமாம், தம்பி! வேதனை நிரம்பிய உண்மையை நான், உரைக்கிறேன், மொழி, இனம், நாடு, விடுதலை,—எனும் உணர்ச்சிகள், உன் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரியும், இப்போதுதான், இருக்கிறார், அந்தப் புண்யவான்!! உன்னையும் என்னையும், நமக்கு உடன் இருந்து பணியாற்றும் பல இலட்சம் பண்பு நிறை வீரர் குழாத்தையும், இளித்தவாயர் என்றும், ஏதும் செய்ய இயலாதார் என்றும், பேசிக்கொண்டும் ஏசிக்கொண்டும் உலா வருகிறார், அந்த உத்தமர்!

டிவேலரா சொன்னார், மொழியை இழந்திடாதீர், பிறகு விடுதலைக்கான வழியே அழிந்துபடும், என்று.

இவர் கூறுகிறார், இதென்ன, பித்தம்! என் மொழி! நன் மொழி! என்ற பேச்சு! தாய்மொழி! தந்தை மொழி! என்ற வாதம்! இதுதான் படிப்பேன், இதைப் படிக்கமாட்டேன், என்ற பிடிவாதம்! இந்த மொழிவெறி ஆகாது என்கிறார்.

உலகம் மெச்சுகிறது, டிவேலராவை!

உடனிருப்போர் மெச்சுகின்றனர், தாய் மொழியையும் இழித்துப் பேசிடும், இந்த மா மேதையை!!

எந்தப் பித்தர் விடுதியில் கண்டாய் அப்படிப் பட்ட சத்தற்ற ஜென்மத்தை என்று கேட்கிறாய், தம்பி! கோபத்துடன்! ஆனால், நான், வருத்தத்துடன் அல்லவோ, பதிலளிக்கவேண்டி இருக்கிறது; இத்தகைய இழிமொழி பேசித் திரிபவர், மேலிடத்தில் அல்லவா இருக்கிறார்! காமராஜர், தம்பி! முதலமைச்சர்! அவரல்லவா பேசுகிறார், நமக்கு மொழிவெறியாம்! தமிழ்! தமிழ்! என்று கூவித் திரிகிறோமாம்! எந்த மொழியாக இருந்தால் என்ன, என்கிறார்!!

மொழியைக் காத்திடின் உரிமை வாழ்வு நிலைத்திடும் என்று பேசிடும் டிவேலரா, அயர்லாந்து நாட்டில்!

மொழிகாத்திடப் படை திரண்டு நிற்கும் தமிழ் நாட்டிலே, அரசோச்சுகிறார், மொழிவழி கூடாது என்று பேசிடும், காமராசர்.

எத்தனை எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக் கொண்டோம்; கொற்றம் இழந்தோம் கோட்டை இழந்தோம்; வாணிபம் இழந்தோம், விருது பல வற்றை இழந்து நிற்கிறோம்; தொழில் வளம் இழந்தோம் தோழர்களை இழந்தோம்; கலம் இழந்தோம்; காவியம் இயற்றும் திறம் இழந்தோம்; இத்தனை இன்னல்களும் தாங்கிக்கொண்டோம்; ஆனால், தமிழ்மொழியிடம் தமிழன் காட்டவேண்டிய பற்றினை, தாய்மொழிக்குப் பேராபத்து எனின், துடித்தெழுந்து போரிடும் வீரத்தினை, தாய்மொழியைத் தாழ்த்திப், பேய்மொழி ஒன்றினைப் புகுத்திடும் கொடுமையை எதிர்த்திடும் வீரத்தினை, ஒரு தமிழன் அரசாளும் தமிழன், தமிழ்நாட்டில், நாம் உயிருடன் உலவிக்கொண்டிருக்கும் நாட்களில், மொழிவெறி என்று கேலி பேசி இகழ்வது, அதனை நாம் கேட்டுக்கொண்டு நிற்பது, எனும், இந்தக் கொடுமையையுமா, தாங்கிக்கொள்ளவேண்டும்!

"ஏ! ஏ! தாங்கிக்கொள்ளாமல், என்ன, தாவிக் குதிப்பீர்களா?" — என்று பேசுகிறார், காமராஜர். காவியத் தமிழ் உலவிய தமிழகத்தில் இன்று இந்த 'காடி'த் தமிழ் வாடை கிளப்புகிறது. 'காடி' என்றுரைத்த காரணம், தம்பி! காமராஜர் கூறிடும் அதி அற்புதமான வாதம் இருக்கிறதே, மொழிவெறி கூடாது என்பது, அது நாம் முன்பே பலமுறை, வேறு சிலர், பேசிப்பேசி, கேட்டுக்கேட்டுப் புளித்துப் போனது! பழைய சரக்கு! வெறும் காடி!!

எதுபற்று, எதுவெறி—என்பதைக் கண்டறிய, யார் இந்தக் காமராஜருக்கு, அதிகாரம் அளித்தனர்? ஓட் அளித்தனர், மேலிடம் அமர! மொழிபற்றிய 'முடிவுரை' கூறவா!! கன்னித்தமிழ்பற்றி, இன்னும் நடத்தப்படவேண்டிய ஆராய்ச்சி ஏராளம் என்கின்றனர், கற்றறிந்தோர், வித்தகர், புலவர் பெருமக்கள். கானூர் படையாச்சியையும் வானூர் ரெட்டியாரையும், மேனூர் முதலியாரையும், பள்ளப்பட்டி மரக்காயரையும் பாப்பாரப்பட்டி கவுண்டரையும், வாடிப்பட்டியாரையும் வத்தலகுண்டாரையும், தேடித்தேடிப் பிடித்து வைத்துக்கொண்டு, தேர்தல் வேலையைக் கவனிக்கக் கற்றுக்கொண்ட, இவர், தமிழ்மொழியின் தொன்மை மென்மைபற்றியும், அதற்கு இன்று உள்ள நிலை பற்றியும், அறிந்திட வாய்ப்பு ஏது? நாலைந்து புலவர்கள், நான் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருகிறார்கள் என்பாரேல், நாடாள்கிறார் என்பதால் நாடிவருபவர்களேயன்றி, ஏடாளும் தகுதி பெற்றவர் என்பதால் அல்ல, என்றன்றி வேறென்ன பதில் அளிப்பது.

பற்று—வெறி — இந்த இரு நிலைகளுக்கும் இலக்கணம் காணல் எளிதல்ல—அளவு காட்டலும் ஆகும் காரியமல்ல.

இவருக்கு, நாம் மொழிக்காக வரிந்துகட்டி நிற்பது, பிடிக்கவில்லை — எனவே அதனை வெறி என்கிறார். அவ்வளவே தவிர, இவரென்ன, உணர்ச்சிகளை, வகைபடுத்தி, உரைத்துப்பார்க்கவோ, நிறுத்துப்பார்க்கவோ, தனியானதோர் முறை கண்டறிந்த வித்தகரோ? எவரும் கூறார். இவரே கூறிடக் கூசுவார். எனினும், முதலமைச்சர் என்றநிலை பெற்றதால். எதையும் கூறிடும் வாய்ப்புக்கிடைக்கிறதல்லவா! அதனால் அடித்துப் பேசுகிறார். கடன்பெற ஒரு கனவான் வீட்டுக்குச் சென்றகாலை, பித்துப்பிடித்த அவன் மகன் தாவிவந்து காலையோ, கன்னத்தையோ, கடித்தால், ஏழை என்ன செய்ய முடிகிறது! முதலிலேயே வட்டிசெலுத்துகிறோம், என்று எண்ணிக்கொண்டு விடுகிறான்.

நாடாள்பவர் எது பேசினாலும், தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. பூங்காவில் அமர்ந்திருக்கும் போது, புள்ளினம் எச்சமிட, அது சட்டையில்வீழ்ந்து கெடுக்கிறது—என்னசெய்ய முடிகிறது! எழுந்து செல்கிறோம் வேறிடம் தேடி. எச்சமிட்டு நம்மை வேறிடம் செல்லச் செய்ததால், அந்தப் புள்ளினம், நம்மை விரட்டிய வீராதிவீரன், என்ற விருது பெறவா, தகுதி அடைகிறது.

நாடாளத்தான் நான் வந்தேனேயன்றி, நாவாள அல்ல, அது தன்னிச்சையாக, ஏதேதோ செய்யும், என்றுரைப்பதுபோல, அவர், ஏதேதோபேசுகிறார்.

பள்ளிக்கூடங்கள் கட்டினேன் என்கிறார்--காலஞ்சென்ற ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் ஒருமுறைகூடச் சொன்னதில்லை, நான் ஒரு பல்கலைக் கழகம் அமைத்தேன் என்று—80-கோடி ரூபாய் பெறுகிறது துரைத்தனம் — ஆனால், ஏதோ, எட்டுத் தலைமுறைக்கு முன்னாலே, இவர் குடும்பத்தார், ஈட்டிய பெரும்பொருளை எடுத்துச் செலவிடும், வள்ளல்போல, பள்ளிக்கூடங்கள் கட்டினேன் என்கிறார்! சரி! என்னமோ, ஒருவிதமான சபலம், பேசி, அற்ப சந்தோஷத்தை அனுபவித்துவிட்டுப் போகட்டும், என்று கேட்போர், எண்ணிக்கொள்கின்றனர். அந்த அளவோடு நில்லாமல், மொழிகுறித்துமா, 'கருத்துரை' வழங்க முன்வரவேண்டும்!!

தமிழகத்தில் இன்று காணப்படுவது, மொழிவெறி அல்ல! வெறியரிடமிருந்து மொழியைக் காப்பாற்றும் பணியில், தமிழரில் தருக்கிபடைத்தோர் ஈடுபட்டுள்ளனர்.

கடைசிச் செய்தி யாது தருகிறீர்? என்று கேட்டால், அயர்லாந்துமக்களே! ஒற்றுமையாக இருங்கள்! வல்லமையோடு இருங்கள்! உழைத்துச் செல்வத்தைத் தேடுங்கள்! தேடியதை மற்றையோருக்கும் தருங்கள்! கல்விச் செல்வத்தை மறவாதீர்கள்! ஒழுக்கத்தை மறவாதீர்கள்! கர்த்தரை வழிபடுங்கள்! —என்று எத்தனை எத்தனையோ கூறியிருக்கலாம், திவேலரா. ஆனால் அவர், அயரிஷ் மொழியைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அப்போதுதான், அயரிஷ் நாடு நிலைக்கும் என்று கூறினார். நல்லவேளை, அவர் நாட்டிலே ஒரு காமராஜர் இளம்பவில்லை — மொழிவெறி கூடாது, என்று பேச!! ஆனால், அயர்லாந்து நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தும் நோக்கம் கொண்ட, பிரிட்டிஷ் ஏதேச்சாதிகாரி, திவேலரா பேச்சினைக்கேட்டு, என்ன சொல்லுவான். செச்சே! இந்தத் திவேலராவுக்கு என்ன புத்தி இப்படிக் கெட்டுவிட்டதே! மொழிவெறியைக் கிளறுகிறாரே!!"—என்றுதானே, கூறுவான்.

அங்ஙனமெனின், காமராஜர், தமிழரைத் தாசராக்கிடும், ஏதேச்சாதிகாரியோ, எனில் அல்ல! அல்ல! அவ்வளவு கடினமான வேலையில் அவர் ஈடுபட்டில்லை; தமிழரைத் தாசராக்கத் திட்டமிட்டு, இந்தியைப் புகுத்திடும் வடநாட்டு இந்தி ஏதேச்சாதிகாரிகளுக்கு, இவர் 'எடுபிடி' வேலை பார்த்தால் போதும் என்றிருக்கிறார். இவர் பேசுகிறார், வெறி கூடாது என்று.

ஆனால், உண்மையில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆதிக்க வெறிபிடித்தவர்கள், இந்திமொழியை அகில—இந்தியாவுக்கும் ஆட்சிமொழியாக்கிவிட்டதாக அறிவித்துவிட்டார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுபட்டோம் என்ற களிப்பும், விடுதலை பெற்றதும், செயல்முறைகளை ஒழுங்குபடுத்திக்கொள்ளவேண்டும், அரசியல் சட்டதிட்டத்தை விரைவாகச் சமைத்திடும் திறம் இருப்பதை உலகுக்குக் காட்டவேண்டும் என்ற ஆர்வமும், ததும்பிக்கொண்டிருந்த நேரத்திலே, மொழி பற்றி முடிவு எடுத்தனர். இந்தியே, ஆட்சிமொழியாக இருத்தல் வேண்டுமென்று தீர்மானித்தனர்.

அப்போதேகூட, குமுறலும், கருத்து வேற்றுமையும் எழுந்தன. ஆனால் விழாக்கோலம், விவாதத்தைக் குறைத்துவிட்டது, ஆபத்தின் அளவும் வகையும் பற்றி அன்று அவ்வளவு தெளிவாக அறிந்து கொள்ளப் பலரால் முடியவில்லை. வெள்ளைக்காரன் வெளியேறிவிட்டான்; இனி நாமே வைசிராய், நாமே கவர்னர், நமக்கே மந்திரி வேலைகள் என்ற இந்த எண்ணமே மேலோங்கி நின்றது. அந்த மகிழ்ச்சி, மற்ற எதுபற்றியும் சிந்திக்க இடமளிக்கவில்லை. இந்தி ஆதிக்கக்காரர்கள், தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொண்டனர்.

ஆனால், அப்போதும்கூட, தமிழகத்திலே, திராவிட இயக்கம் மட்டும் விழிப்புணர்ச்சியுடன் இருந்தது; வர இருக்கும் ஆபத்தை எடுத்துக்காட்டி எச்சரித்தவண்ணமிருந்தது.

'சுதந்திரத்தை'ப்பெறுவதற்குமுன்பே, காங்கிரஸ் கட்சியினர், பதவியைச் சுவைத்தனர்; அந்த நாளில் ஆச்சாரியார் இந்தி மொழியைக் கட்டாயபாடமாக்கியதும், கடும் எதிர்ப்பு மூண்டதும், ஆயிரவர் சிறை சென்றதும், இரு காளையர் சிறையில் மாண்டதும், தமிழகத்தின் வீரவரலாற்றுச் சுவடியிலே இடம் பெற்றுள்ளன.

அன்றெல்லாம், இந்தி எதிர்ப்பு என்பது, ஏமாற்றமடைந்த அரசியல் வாதிகளின் 'கைவரிசை' என்று பேசப்பட்டது; ஆச்சாரியார், அப்படிச் சொல்லித்தான், நிலைமையை விளக்கப் பார்த்தார்; இன்றோ, அவரே இந்தி எதிர்ப்பாளராகிவிட்டிருக்கிறார்.

தம்பி! இருபது, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், நீ, கேட்டதுண்டோ இல்லையோ, நானறியேன்—இந்தியை இன்று ஆட்சிமொழி என்றல்லவா சொல்கிறார்கள்; அப்போதெல்லாம், இந்தியை **தேசீய மொழி** என்றுதான் சொல்வார்கள். தட்டித் தட்டிப் பேசுவார்கள்.

தமிழனுக்கு, இந்தியோ வேறெந்த மொழியோ, தேசிய மொழியாகாது!—என்பதற்கான காரணங்களைக் காட்டி, தீவிரமான பிரச்சாரம் செய்து, கிளர்ச்சிகளை நடத்தி, சிறை சென்று, பல்வேறு தொல்லைகளை நாம் தாங்கிக்கொண்ட பிறகு இந்தி ஆதரவாளர்களின் தலைக்கனம் குறைந்தது—இப்போது மெத்த நாவடக்கத்துடன், இந்தியாவில் 14 தேசிய மொழிகள் உண்டு; இந்தி, அதிலே ஒன்று; ஆனால், மிக அதிகம்பேர் பேசும் மொழி; எனவே, அது பொது மொழி, ஆட்சிமொழி—என்று இப்போது, பேசுகிறார்கள்.

இந்தி ஆதிக்க நோக்கத்தை அவர்கள் விட்டுவிடவில்லை, ஆனால் முறையை, பேச்சை மாற்றிக்கொண்டனர்.

தமிழர் தவிர மற்றவர் மொழி—இனம்—பண்பாடு—என்னும் தொடர்புபற்றி அதிகக் கவலையும் பொறுப்பும் காட்டவில்லை. இங்கோ, ஆர்வத்தீ என்றுமே அணைந்ததில்லை. ஆச்சாரியார் முயன்று பார்த்துத் தோற்றார்! ஆள்வது யார் என்று பார்த்துவிடலாம் என்று ஆர்ப்பரித்தார்! நாமல்லவா, வெள்ளைக்காரரை எதிர்த்தவர்கள்—மொழிக்காக வாதிடும் இவர்கள் போரிடவல்லவர்களல்ல; அடக்குமுறையைத் தாங்கமாட்டார்கள், என்று தப்புக் கணக்குப் போட்டார்; தடியடி தந்தார்; மண்டைகள் உடைந்தன, மனம் உடையவில்லை; மருண்டார்; ஓடிவந்த

இந்திப் பெண்ணே! கேள்! நீ, தேடிவந்த நாடு இதல்லவே!—என்று பாடினர், களிநடமாடினர், தமிழர், கட்டாய இந்தி ஒழிந்தபோது.

அந்தச் சம்பவத்தை அறியாததால், காமராஜர், இன்று ஆர்ப்பரிக்கிருர்; இந்தி எதிர்ப்புக்கிளர்ச்சியா? செய்யட்டும், பார்க்கலாம்!—என்கிருர் துப்பாக்கி இருக்கிறது, தோட்டாக்கள் உள்ளன என்று மிரட்டுகிருர்.

இரத்தக்கரைபடிந்த கரம்! ஈரமற்ற நெஞ்சு! விளக்கம்பெற மறுக்கும் இயல்பு! அதிகார போதை!—இவ்வளவும் காமராஜர் கட்சியிடம் நிரம்பி இருப்பது தெரியும். தெரிந்தும், குமாரபாளையத்தில், நமது பொதுக்குழுவில், இந்தியை எதிர்ப்பது என்று, முடிவு செய்திருக்கிறோம்.

ஆணைக்காகக் காத்திருந்த, அருமைத் தம்பி! ஆணை பிறந்துவிட்டது— ஆகஸ்ட்டு இறுதியில், உன் ஆற்றலுக்கு விருந்து, வாய்ப்பு!

துப்பாக்கி இருக்கிறது என்கிருரே, இருக்கட்டும்; சுட்டுத் தள்ளட்டும்.

ஒவ்வொரு நாட்டுத் தலைவனும், மக்கள் வாழ, தரணி தழைக்க, ஒவ்வொரு விதத்தில் ஒப்பற்ற செயல் செய்து, பெயரெடுத்து, உலக வரலாற்றிலே இடம் பெறுகிருன். இவர், பாவம், என்ன செய்து பெயரெடுக்கமுடியும்!

உலகுக்கொரு அறநூல் தீட்டுவாரா? போர் ஒழிந்து புது உலகு காணத் திட்டம் காட்டுவாரா? பஞ்சம் போக்கிட வழி காண்பாரா? கடலையும் காற்றையும், கனத்துப்பொருள்களையும் கட்டுக்குள் கொண்டு வருகிருர்கள், அறிவாற்றல் மிக்கோர். செயற்கைக் கோளங்களைச் சமைத்துக் காட்டுகின்றனர், விஞ்ஞான வித்தகர்கள். அவர்களெல்லாம், மக்களுக்கு இதம் செய்து, நிலையான புகழ் தேடிக்கொள்கின்றனர். இவர், எது செய்ய இயலும்? எதற்குத் தம்மைத் தகுதி உள்ளவர் ஆக்கிக்கொண்டார்? எனவே, அவரால் முடிந்ததைச் செய்யத்தானே விருப்பம் பிறக்கும். மற்ற மற்றவர்கள், மக்களை வாழவைத்துப் பெயரெடுக்கின்றனர். இவர், சாகவைத்துப் பெயரெடுக்கட்டுமே! சுட்டுத் தள்ளட்டும்—சூரர் என்று பெயரெடுக்கட்டும். சாகப் பயப்படும் சமுதாயத்திலா, நாம் பிறந்தோம். தமிழ் இனம் இறவாப் பெரும்புகழ் பெறவேண்டுமா; அதற்காக நம்மில் சிலர், செத்தால், என்ன நஷ்டம்!

ஈளைகட்டி இருமி இழுத்திழுத்துச் சாகின்றனர், எத்துணையோ பேர்!

காமராஜர் மிரட்டுகின்றபடி, துப்பாக்கியால் சுட்டுத் தள்ளினுல், நாம், உடல் தேயாமல், உருக்குலையாமல், நோய்க்கிருமிகளால் கொத்தப்படாமல், பலர்பார்த்துக்கொண்டிருக்கும்போதே, இரத்தத்தின் சூடு குறையாமல், நரம்புகளின் முறுக்குக் குலையாமல், கண் பஞ்சடையாமல், காது செவிடுபடாமல், வாய் அடைத்துப் போகாமல், வீர மரணம் அடைவோம்! களத்திலே, அப்படி ஒரு நூறு வீரர்களின் உடலம் கிடந்தால், தம்பி! கடாரம், கலிங்கம், இமயம், சிங்களம், என்ற வெற்றி பல கண்ட இனம், தொடர்ந்து தன் புகழ் மங்காது பார்த்துக்கொண்டது, என்றன்றே பொருள்.

சென்ற திங்கள், பத்திரிகையில் படித்திருப்பாயே தம்பி! வெப்பத்தின் கொடுமையால், நூறு பேர் இருக்குமே, இறந்துபட்டவர்கள்.

ஒரு முதலமைச்சர், அதிலும் தமிழர், அவ்வளவு ஆசையாக அழைக்கும்போது, என் துப்பாக்கிகளுக்கு வேலை வேண்டும்! என்று கேட்கும்போது, நம்மிலே சிலர், பலியானுல், என்ன தவறு!! நிலையான புகழ், நினைத்து நினைத்து பெருமைப்படத்தக்க புகழ் கிடைக்கும், அவருக்கு!

மேலும், தம்பி! அவர், தன்னுடைய வீரதீரத்தை வேறு, எந்தக் களம் சென்றுதான் காட்டப்போகிருர்! காட்ட இயலும்!!

"இதோ திரட்டிவிட்டேன், பெரும்படை! மாற்ருரை மாய்த்தொழிக்காது, ஓயமாட்டேன், உறங்கமாட்டேன், முரசுகொட்டுங்கள்! சங்கம் ஊதுங்கள்! கிளம்புகிறேன் என் படையுடன், வட எல்லை காக்க! சீனர்களைவிரட்ட!!—என்று கூறிக் களம்செல்லவா முடியும்!!

அதனுல்தான்; அவர், இப்படிப் பேசித் தன் ஆசையைத் தீர்த்துக்கொள்கிருர்—துப்பாக்கி இருக்கிறது என்று.

தம்பி! படை இருந்தால், நிச்சயம் அரிப்பு இருக்கும்!! உடலிலே ஏற்படும், சிறுபடையே, எவ்வளவோ வேலைக்கிடையில், யார் எதிரில் இருக்கிருர்கள் என்பதைக்கூடக் கவனிக்க இயலாத நிலையில், அரிப்பைப் போக்கிக்கொள்ள, படையுடையானை, வளையவைக்கிறது, நெளியச்செய்கிறது உராயச்செய்கிறது, தேய்த்துக்கொள்ளச் செய்கிறது!

காமராஜரிடமோ போலீஸ்படை!

துப்பாக்கியுடன் தோட்டாவுடன்!!

அரிப்பு, சாமான்யமாகவா, இருக்கும்! அதனுல் தான், பாவம், ஏதேதோ பேசுகிருர்.

பத்துப்பேர்வழிகளைப் பிடித்துச்சிறையில் தள்ளினுல், இயக்கம் படுத்துவிடும் என்று எண்ணித்தான், ஆச்சாரியார், அடக்குமுறைக்குத் தூபமிட்டார்; ஆனுல் இந்தி எதிர்ப்பு வளர்வது கண்டு, மிரண்டு, சட்டசபையில், அவரே அலறிக்கூறினுர்;

புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோலக் கிளம்புகிருர்களே! இந்தச் சனியன் இப்படி ஆகும் என்று தெரிந்திருந்தால், இந்தியைக் சட்டாயமாக்கிப் புகுத்தி இருக்கவேமாட்டேன்! என்று.

காமராஜருக்குக் கூறவேண்டும், தம்பி! அப்போது, உன அண்ணன் 'சர்வாதிகாரி'யாகப் பெரியாரால் நியமிக்கப்பட்டு, இந்தி எதிர்ப்புப் போர் நடத்திய போது, காவிகட்டிய மூவர், உடன் இருந்தனர்— அருணகிரி அடிகள்—ஈழத்துச் சிவானந்த அடிகள்— சண்முகானந்த அடிகள்!! இன்று! 3300-கிளைக்கழகங்கள்! 3-இலட்சத்துக்குமேல் உடனிருப்போர்!

குமாரபாளையத்தில் இதற்கென, அமைக்கப்பட்டுள்ள போராட்டக்குழு, தம்பி சம்பத்தின் தலைமையில் இயங்கத் தொடங்கிவிட்டது. அதில் பங்கேற்றுள்ளவர்கள், தியாகத் தழும்பு பெற்றவர்கள்!! காமராஜர், ஆசைதீரத், தமது துப்பாக்கிக்கு வேலை கொடுத்து மகிழட்டும், பெரும்புகழ் ஈட்டட்டும், தமிழ் மரபு அழிக்கட்டும்; கவலை இல்லை!!

அவருடைய 'தாக்கும் சக்தி' ஒருபுறம் இருக்கட்டும்; உலகிலே மிகப் பயங்கரமான பேயாட்டமாடிய எதேச்சாதிகாரங்கள், பொடிப் பொடியானதை பள்ளிச் சிறுர்கள் படிக்கிறுர்கள்! லூயி மன்னன், ஜார் மன்னன், என்ற பெயர்களும், அவை தரும் பாடங்களும் குழலூதி மாடோட்டும் சிறுவனும் அறிந்திருக்கிருன். யாரைக்கொண்டு, சுடு! என்று கூறத் துடிக்கிருரோ, அந்தப் போலீசும் படையுங்கூட, இவைகளையும், இன்னும் இவைபோன்ற எழுச்சிகளையும் தெரிந்து வைத்திருக்கிருர்கள்.

ஒரு வேடிக்கை, கவனித்தாயா, தம்பி! இப்போது, போலீஸ், படை, ஆகியவற்றினைக்கொண்டு எதேச்சாதிகாரி, மக்களைக் கொல்லக் கிளம்புகிருன்; தூய உள்ளத்தோடு, புனிதமான நோக்கத்துக்காகப், போரிடும் மக்களைச் சுட்டுத் தள்ளியதும், குபுகுபு வென வெளிவரும் இரத்தத்தைக் கண்டதும், சுட்டவர்களின் மனமே சுடுகிறது! தன்னலக்காரர், ஏவுகிருர்கள், நாம் தியாகச் சுடர்களை அழிக்கிறேம்; கொலைத் தொழிலை நம்மைச் செய்யச் சொல்லிவிட்டு, இந்தக் கொடியவர்கள் கொள்ளை இன்பத்தை அனுபவிக்க அரசு நடத்துகிருர்கள்—சே! நமக்கேன், இந்த ஈனப் பிழைப்பு! நாம் சுட்டுத் தள்ளியபோதும், அந்த இளைஞன் கண்களிலே ஆர்வம் ஒளிவிட்டதே! நாடு வாழ அவன் நின்றுன்; நாமோ, நாசகாலர் வாழ அந்த நல்லவர்களைக் கொன்று குவித்தோமே! இதற்கா நாம்! இதற்கா இந்தத் துப்பாக்கி!—என்று எண்ணுகிருர்கள்—அந்த எண்ணம் அவர்களை, வீரர்களாக மட்டுமல்ல, விவேகிகளுமாக்குகிறது கொடுமை செய்யும் ஆட்சியை—அவர்கள் எதிர்த்து ஒழிக்க, மக்கள் வரிசைக்கு வந்து சேருகிருர்கள்—இங்கு அல்ல, வெளியே பல நாடுகளில்.

பொதுமக்களின் எதிர்ப்பு வலுவடையும்போது பசப்புவதும், மக்களின் கவனம் வேறு திக்கில் திரும்பி இருக்கும்போது, திணிப்பதும், இந்தி ஆதிக்கக்காரரின் போக்காகிவிட்டது.

இந்தி சம்பந்தமாகக், காட்டப்படும் பிடிவாதம், ஆணவ அரசுக்கு அறிகுறியாகும் என்பதை, அறிவாளர் எடுத்துரைத்தனர்.

மொழித்துறை வல்லுநர்கள், இந்தி வளமற்றது என்பதை எடுத்துக்காட்டினர்.

இந்தி மொழியை, ஆட்சிமொழியாக்குவது, இந்தியைத் தாய்மொழியாகக்கொண்ட மக்களுக்கு, அலுவலகத் துறையிலே ஆதிக்கத்தை ஏற்படுத்தும் அநீதியாகும் என்பதை, அறவழி அரசியல் இருத்தல் வேண்டும் என்போர் சுட்டிக்காட்டினர்.

நாம், தம்பி! இவைமட்டுமல்ல, இந்தி திணிப்பின் மூலம், தமிழ் மொழிக்கு உள்ள இடம் கெடுவதுடன், தமிழரின் இயல்பு கெட்டு, இன உணர்வு கெட்டு, தனி அரசு அமைத்தாகவேண்டும் என்ற விடுதலை வேட்கையை அறவே அழித்துவிடும், என்பதை உணருகிறேம்.

எனவேதான், மற்றவர்களுக்கு, இது ஒருமொழிப் பிரச்சினையாக மட்டும் தெரிகிறது, நமக்கோ, இது இனவழி அரசு நடாத்தும் உரிமையை அழித்திடும் அரசியல் சூழ்ச்சியாகத் தோன்றுகிறது.

இந்தி விஷயத்திலே, அரசியல் சட்டம் மேற்கொண்டுள்ள திட்டம், ஆர அமர யோசிக்காமலும், மக்களின் கருத்தினை அறியாமலும், விளைவுகளைப் பற்றித் தெரிந்துகொள்ளாமலும், ஏற்படுத்தப்பட்டதாகும்.

எனவே, இது, திருத்தப்பட்டாகவேண்டும்.

1965-ம் ஆண்டு, இந்தி ஆட்சிமொழியாகிவிடும், ஆங்கிலம் அறவே நீக்கப்பட்டுவிடும், என்று அரசியல் சட்டம் காட்டுகிறது.

அந்த நாள் நெருங்க நெருங்க, இந்தி மொழி ஆதிக்கக்காரரின் வெறி உணர்ச்சியும் வளரலாயிற்று; ஒளிவு மறைவு இன்றி அவர்கள் தங்கள் ஆதிக்கத்தைக் காட்டிக்கொள்ளத் தலைப்பட்டனர்.

எமது மொழியேஆட்சிமொழி! எனவே நாங்களே ஆட்சி செய்ய வல்லவர்கள் — என்று அவர்கள் எக்காளமிடத் துணிந்தனர்.

பிறகே, தமிழர்களின் அளவுக்கு இல்லாவிட்டாலும், ஓரளவுக்கு, வங்காளிகள் கொதித்தெழுந்து, இந்தித் திணிப்பை எதிர்த்தனர்.

இந்தி ஆட்சிமொழியாகிவிட்டால், இந்தி பேசாத பகுதிகளில், குறிப்பாகத் தென்னகத்தில் வாழும் மக்களுக்கு, அலுவலகங்களிலே, சரியான அளவிலும் முறையிலும், இடம் கிடைக்காது, உரிமை இருக்காது, என்ற உணர்ச்சி மேலோங்கிற்று. கட்டாய இந்தியைப் புகுத்தி, தாளமுத்து, நடராசன் மாண்டிடக் காரணமாயிருந்த, ஆச்சாரியாரே, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, இந்தியை எதிர்க்கலானுர்.

இங்கிலையில், ஆட்சிமொழி குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழு, அறிக்கை வெளியிட்டது. டாக்டர் சுப்பராயன் அவர்கள், இந்தியைப் புகுத்தும் முறையினையும், ஆங்கிலம் அகற்றப்படும் விதத்தையும் கண்டித்து தமது கருத்தை அறிக்கையில் இணைத்து அளித்தார்.

இந்தி பேசாத மக்களின் கருத்தினை மதிக்கவில்லை.

மதிக்காதது மட்டுமல்ல, அவர்களின் கருத்தினை அறிந்துகொள்ள முயற்சிக்கவில்லை.

இந்திமொழியை ஆட்சிமொழியாக்குவது குறித்து இந்தி பேசும் மக்கள், எவ்வளவு அவசரப்படுகிருர்கள், எத்துணை துணிவுடன் இருக்கிருர்கள். என்பதைக் கண்டறிந்து கூறி, ஒப்பம் அளிப்பதாக மட்டுமே, குழுவின் அறிக்கை இருந்தது.

இதனை, டாக்டர் சுப்பராயன் அவர்களின் குறிப்பு, மிக நன்றுக எடுத்துக்காட்டவே, அதுவரை இந்தி விஷயம், சாதாரண மொழிப்பிரச்சினை என்று எண்ணிக்கொண்டிருந்தோருக்கெல்லாம்கூட, சூடு பிறந்தது, இந்திக்கு எதிர்ப்பு வலுத்தது.

இந்த எதிர்ப்பு மேலும் வலுவடைவதற்குள், தமது நோக்கத்தை ஈடேற்றிக்கொள்ளவேண்டுமென்று, இந்தி ஆதிக்கக்காரர்கள், காங்கிரஸ் மேலிடத்தைக் கைப்பற்றிக்கொண்டு, கட்டளைகள் பிறப்பிக்கலாயினர்.

அந்த நேரத்தில்தான், நேரு பண்டிதர், நேர்மைக்கும் நீதிக்கும் துணை நிற்கும் கோலம் பூண்டவராகக் காட்சி தந்தார்.

இந்தி மொழியைத் திணிப்பது அடாத செயல் என்று சாடினர்.

இந்திமொழி விஷயத்தில், இந்தி பேசும் மக்கள் காட்டும் வெறி உணர்ச்சி கண்டிக்கப்படவேண்டும் என்று உரைத்தார்.

சட்டத்தில் 1965ல் ஆங்கிலம் அகற்றப்படும், அந்த இடத்தில் இந்தி அமர்ந்து அரசோச்சும் என்று இருந்தபோதிலும், அதன்படி, நிலைமை ஏற்பட்டுவிடாது என்று உறுதி கூறினர்.

இந்தி பேசாத மக்கள் ஆங்கிலம் எவ்வளவு காலம் ஆட்சி மொழியாக—இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அது வரை ஆங்கிலம் நீடித்திருக்கும் என்று தெரிவித்தார்.

இது விஷயமாக எந்த ஏற்பாடு செய்வதானாலும், இந்தி பேசாத மக்களுடைய கருத்தினை அறிந்தே செய்யப்படும், என்று வாக்களித்தார்,

இது விஷயமாக இந்தி பேசும் மக்களின் கருத்துக் கவனிக்கப்படவேண்டிய அவசியம்கூட இல்லை என்று அடித்துப் பேசினர்.

இவ்வளவும், தம்பி! பாராளுமன்றத்தில் பேசினர்.

இந்த நல்லுரையை, அவர் ஒரு முறை அல்ல, இருமுறை பேசினர்.

அவர் பேசப் பேச, பாராளுமன்றத்தில், மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது; பலரும் பாராட்டினர், பத்திரிகைகள் புகழ்ந்தன.

பயம் போக்கினர், பாரதப் பிரதமர்.

இந்தி வெறியருக்குச் சரியான சவுக்கடி—என்றெல்லாம் தலைப்புகள் கொடுத்து பத்திரிகைகள் எழுதின.

சென்ற ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 7–ம் நாள் பண்டித நேரு பேசினர்; இனி, இந்தி ஆதிக்கக்காரர்களின் எண்ணம் ஈடேருது என்று எல்லோரும் எண்ணிக்கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று, ஆட்சிமொழிப் பிரச்சினைபற்றி அமைந்தது.

பண்டித நேருவின் பட்டவர்த்தனமான வாக்குறுதியின்படியே, இனிக் காரியம் இருக்கும் என்ற உறுதி பலப்பட்டது.

ஆனல், தம்பி! இப்போது, ஆட்சிமொழிபற்றி, குடிஅரசுத் தலைவர் வெளியிட்டுள்ள ஆணை, நேரு பண்டிதர் தந்த வாக்குறுதியின்படி இல்லை.

அந்த வாக்குறுதிபற்றிக் குடிஅரசுத் தலைவரின் ஆணையில், முன்னுரையில் ஏனோதானோ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, ஆணையில், அந்த வாக்குறுதி இணைக்கப்பட்டு இல்லை.

எனவே, இந்தி ஆதிக்கக்காரர்கள் துள்ளுகின்றனர்.

இந்தியை ஆட்சி மொழியாக்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த பல குழுக்கள், விரைவாக வேலை செய்கின்றன.

குடிஅரசுத் தலைவரின் ஆணையை நிறைவேற்ற என்னென்ன செய்யவேண்டும் என்பது குறித்து டில்லி அரசு, மிகத் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது.

நேருபண்டிதர் கொடுத்த வாக்குறுதி எங்கே?

இந்தியை ஆட்சிமொழியாக்கத் தீவிரமாக நடவடிக்கை எடுக்கும்போது, ஆட்சிமொழிபற்றி இந்தி பேசாத பகுதிகளில் வாழும் மக்களின் கருத்தினை அறிந்துகொள்ள ஏன் முயற்சி எடுக்கப்படவில்லை?

இவை நம்மை வாட்டும் பிரச்சினைகள்.

எனவேதான், குடிஅரசுத் தலைவர், ஆகஸ்ட் திங்கள் இறுதிக்குள், இந்தி ஆதிக்கத்துக்கு ஒப்பம் அளித்திடும் முறையில் பிறப்பித்துவிட்ட ஆணையைத் திரும்பப் பெறவேண்டும் — நேருபண்டிதரின் வாக்குறுதிக்கு ஏற்ப, நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதற்கான உறுதி அளிக்கப்படவேண்டும், இல்லையேல், இந்தி எதிர்ப்புக்கான போர் தொடுத்திடவேண்டும், என்று பொதுக்குழு தீர்மானித்து, குழுவும் அமைத்திருக்கிறது.

குடிஅரசுத் தலைவரின் கவனத்துக்கு, தமிழகத்தின் நிலையைக்கொண்டு செல்வதும்; தமிழ் இனத்தின் உள்ளக்கொதிப்பை எடுத்துக்காட்டுவதும், காமராஜரின் கடமையாயிருக்க, அவர், நம்மை ஒழித்துக்கட்டப்போவதாகக் கொக்கரிக்கிருர்.

பாராளுமன்றத்திலே பாரதப்பிரதமர், ஒரு வாக்குறுதி தருகிருர், அது மதிப்பற்று, பொருளற்று, கவைக்குதவாது போகிறது; அதைப் பார்த்துக்கொண்டு அவரும், கைகட்டி வாய்பொத்திக் கிடக்கிருர்.

பாண்டுங் மகாநாட்டிலே பேசப்பட்ட பஞ்சசீலக் கொள்கையைக் காற்றில் பறக்கவிடலாமா என்று சீனவைக் கேட்கிறோம்.

இதோ, இங்கு, பாராளுமன்றத்தில் பண்டிதநேரு தந்த வாக்குறுதி, மீறப்படும் முறையில், காரியம் நடக்கிறது! சரியாகுமா?]

இது, நேருவின் பேச்சுக்கு, மதிப்பு அளிக்கமாட்டோம், என்பதற்கு எடுத்துக்காட்டா? அல்லது, அவர் அந்த இராகம்பாடுவார், நீங்கள் மயங்கிட; நாங்களோ, எமது விருப்பத்தின்படி காரியத்தை நிறைவேற்றிக்கொள்வோம், என்ற முறையில் அமைந்துள்ள சூழ்ச்சியா!!

நேருபண்டிதரின் வாக்குறுதியின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பது உறுதியானல், உடனடியாகக் குடிஅரசுத்தலைவர் புதியதோர்ஆணைபிறப்பிக்கவேண்டும் — இந்தி 1965-ல் எப்படியும் ஆட்சிமொழி ஆகிவிடும் என்று உள்ள சட்டத்தைத் திருத்தவும், ஆட்சிமொழி விஷயமாக இந்தி பேசாத மக்களுடைய கருத்தினை அறியவும், வழிவகை மேற்கொள்ளப்படவேண்டும். இதனைச் செய்யும்படி, வலியுறுத்துவது, அனைவரின் கடமையுமாகும்.

இதனைச் செய்தாகவேண்டும் என்பதை வலியுறுத்த, வெற்றிகிட்டும்வரை போரிட, உறுதிகொண்டிருக்கிறது நமது கழகம்.

தம்பி! ஆகஸ்ட்டு திங்கள் இறுதி நாள், குடிஅரசுத் தலைவர், புதிய நிலைமையை உருவாக்காதிருப்பாரானல், நாடெங்கும், கண்டன ஊர்வலங்களும், கண்

டனக் கூட்டங்களும் நடத்துவது என்று முடிவாகி இருப்பதை, நீ அறிவாய்.

அதற்குக் காமராஜர் சர்க்கார், தடைவிதித்தால், மீறிநடத்துவது என்பதையும் பொதுக்குழு தீர்மானித்திருப்பது உனக்குத் தெரியும்.

துப்பாக்கி இருக்கிறது, அதிலே தோட்டாவும் இருக்கிறது என்று பேசுகிறாராமே, துரைத்தனத்தின் முதல்வர், காமராஜர், அவர், அன்று வேண்டுமானால், அவருடைய ஆசையைத் தீர்த்துக்கொள்ளட்டும்; சுட்டுத்தள்ளட்டும்.

தமிழர், அன்று கொள்ளும் போர்க்கோலம், எத்தனை பிணங்கள் கீழே வீழ்ந்தாலும், கலையப்போவதில்லை, என்பதை, களம் பல கண்டவனே! கொள்கைக்காக இன்னுயிரையும் ஈந்திடத் துணிபவனே! உன் சார்பில், ஊராள்வோருக்கு, உரைத்திடலாமன்றோ!

போலீஸ் இருக்கிறது, போர் என்ன செய்யும்!

படை இருக்கிறது, போராட்டம் எப்படி வெற்றி பெறும்.

சிறை இருக்கிறது, கிளர்ச்சி எங்ஙனம் வெற்றி பெறும்—என்று சீறிப்பேசுவது, ஆணவ அரசுக்கு அடிக்கடி ஏற்படும், நோய், அறிவோம.

தம்பி! உலகம் கண்டு வியந்திடும் செல்வம், நினைத்தாலே நடுக்கமெடுக்கும் விதமான பயங்கரப் போர்க்கருவிகள், பாரெங்கும் சென்று போரிடத்தக்க வல்லமை மிகு வீரர்கள், வானிலே பெரியதோர் பந்தல் என்று கூறத்தக்க அளவு விமானங்கள், எந்தக் கடலிலும் எமது வெற்றி காட்டுவோம் என்றுரைக்கத்தக்க விதமான கலங்கள், எல்லாம் இருக்கின்றன அமெரிக்காவுக்கு.

அவை யாவும், சுட்டுவிரல் காட்டினால் வந்து, குற்றவேல் புரியக் காத்துக்கிடக்கின்றன.

அணுகுண்டும் நீர்வளிக் குண்டும் அடுக்கடுக்காக உள்ளன. இருந்தும், மக்கள், குறிப்பாக இளைஞர்கள், சிறப்பாக மாணவர்கள், ஆர்த்தெழுந்து, தடுத்தனர், அயிசனேவர் டோக்கியோ வரக்கூடாது, என்று; வரவில்லையே, தம்பி! கவனித்தாயா!

அயிசனேவர், ஏவிவிடக்கூடிய அழிவினைவிடவா, காமராஜர் கணை தொடுப்பார்! கைகொட்டிச் சிரிப்பார்கள், அவ்விதம் கேட்டாலே!

போர் பல கண்டவர், வெற்றிபல பெற்றவர், படை பல நடத்திச் சென்றவர், கடந்த உலகப்பெரும் போரில் முதல்வர் போன்றிருந்து வீர தீரம் காட்டியவர், விருது பல பெற்றவர், செல்வத்திலே, தொழில் வளத்திலே, விஞ்ஞான வளர்ச்சியிலே தலைசிறந்தது என்றுள்ள அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர், அயிசனேவர், அவர் ஜப்பானுக்கு வருகிறார், அரசு ஆளும் கட்சி, விழா நடத்துவோம், வரவேற்பு வைபவமாக இருக்கும், யார் தடுத்தாலும் நின்றுவிடாது, எவர் எதிர்த்தாலும், வரவேற்றே தீருவோம், என்று முழக்கமிட்டனர், சில இலட்சம் இளைஞர்கள், சாகப் பயப்படமாட்டோம். அயிசனேவர் வருவதைத் தடுத்தே தீருவோம் என்றனர் தம்பி! ஆளுங்கட்சியினரிடம் துப்பாக்கியும் தோட்டாவும் நிரம்பத்தான்! சுட்டும் தள்ளினர்! ஆனால், அந்தக் குண்டுகள், மக்கள் வெள்ளத்தை என்ன செய்யமுடியும், சிலர் இறந்துபடுவர், மற்றவர்! சும்மாவா இருப்பர், என்று சிம்மக் குரலெழுப்பினர், ஆர்ப்பாட்டக்காரர்; ஆள்வது நான் என்றார் கிஷி! அதன் விளைவுதான் இது என்றனர் கிளர்ச்சிக்காரர்கள்!! எனக்கே அரச அவையில் வலிவு என்றார் கிஷி! உள்ளே போகவும் வெளியே வரவும் கூட, உமக்கு எமது அனுமதி வேண்டும், அறிவாய்! என்றனர். அந்த மக்கள்! சுடு என்று உத்தரவிட்டார் கிஷி! பிணம் வீழ்ந்தது, மற்றவரின வீரம் கொழுந்துவிட்டெரிந்தது! தம்பி! கடைசியில், அயிசனேவர் டோக்கியோவருவது, நின்றே போய்விட்டது.

ஜப்பான் நாட்டுக் கிஷியைவிட, நம்ம காமராஜர், மிரட்டிப் பேசுவதிலே வல்லவரா!!

பேசுகிறார், வீராப்பாக; அப்படிப் பேசினால்தான், தேர்தலுக்காகத் திரட்டும் படையினர், ஓடிடாமல், உடன் இருப்பார்கள் என்ற எண்ணத்தில்.

அயிசனேவரின் டோக்கியோ வருகை தடுக்கப்பட்டுப்போய்விட்டதைக் கண்டோம்.

நாம், நமது குருதியைக் கொட்டியேனும், கொடுமைபுரியவரும் இந்தியை விரட்டத் தீர்மானித்துவிட்டோம்.

ஆணைக்காகக் காத்திருந்த, அருமைத் தம்பி! ஆணை பிறந்துவிட்டது; அழைப்புக் கிடைத்துவிட்டது; அணிவகுப்பிலே வந்து சேர்!!

தாயகம் அழைக்கிறது, தன்மான வீரனே! தளைகள் நொறுக்கிட விரைந்து வா, வருகிற வேகத்தில், மற்றவர்களை அழைத்துவா, மறந்துவிடாதே, பாசறைகள் உள்ளன. பட்டிதொட்டிகளிலெல்லாம், உடன்வர விழைவோர் உள்ளனர் இலட்சக்கணக்கில், அவர்களைக் கண்டு உரையாடி, அழைத்து வா, தம்பி! அதற்கான காலம் இதுதான்.

மீண்டும் மீண்டும் உனக்கு நினைவுபடுத்தத் தேவையில்லை; ஆட்சியாளர், உன் அண்ணனை அதிக நாட்கள், அந்தக் காரியம் செய்யவிட்டுவைத்துக் கொண்டும் இருக்கமாட்டார்கள். ஆணையிட்டு அழைக்கிறது, தாயகம். அஞ்சாநெஞ்சினருக்கு, அரியதோர் வாய்ப்பு. அறிவித்துவிட்டேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

பொன்னித்தீவின் கன்னித்தெய்வம்

மலைக்கள்ளனின் குகையை அடைந்த திலகவதி பிணவாடையைப் பொறுத்துக்கொண்டு ஏதேனும் துப்புக் கிடைக்குமா என்று தேட ஆரம்பித்தாள். ஈ எறும்பு புடைசூழப் பிணமாகப்படுத்திருந்த மலைக்கள்ளனும், உடை நிறைந்த பெட்டியும், கத்திகளும் கட்டாரிகளும் தவிர, வேறெதுவும் காணப்படவில்லை. திலகவதி தேடும்போதுதான் மார்த்தாண்டன் உள்ளே நுழைந்தான். கீழே விழுந்துகிடக்கும் தலைவனைப் பார்த்ததும் "தலைவா" என்று கதறியவாறே நெருங்கி ஓடினான். பிணமாகிவிட்டதையறிந்ததும் கதறி அழுதான். இதைக் கண்ட திலகவதி நடுக்கம் மேலிட்டவளாய் மெள்ளத் தப்பி ஓட முயன்றாள். பார்த்துவிட்டான் மார்த்தாண்டன்.

"நில், ஒரு அடி எடுத்து வைத்தால் பிணமாக்கிவிடுவேன்" என்று கூறியவாறே உருவிய வாளோடு—பெருகிவரும் கோபத்தோடு பாய்ந்தான். பயத்தால் அவள் உடல் முழுவதும் நடுங்கியது. நனைந்தாள் வியர்வையால். மார்த்தாண்டன் அடுக்கடுக்காய்க் கேட்டு வந்த எந்தக் கேள்வியும் அவள் நிலையை மாற்றவில்லை. மாறாக அதிகமாக்கியது. கடைசியாக "நீ ஊமையா" என்ற அவன் கேள்வி அவளுக்குக் கொஞ்சம் தைரியத்தைத் தந்தது. ஊமையாகவே நடிக்க முடிவு கட்டினாள். ஊமையாகவே இருந்தும்விட்டாள். கடைசியாக ஒன்றும் தோன்றாத நிலையில் பிணத்தைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு உருவிய வாளைத் திலகவதியின் முதுகில் குத்தியவாறே அவளைத் தள்ளிக்கொண்டு தன் குகை நோக்கிப் புறப்பட்டான்.

தலைவனைப் பிணமாகக் கண்ட அவனது ஆட்கள் அனைவரும் அதிர்ச்சியுற்றனர்.

"யார் கொன்றது?" என்ற கேள்வி ஏககாலத்தில் அனைவரின் வாயினின்றும் எழுந்தது.

"தெரியவில்லை. ஆனால் தலைவர் குகையில் இந்த ஊமையன் உலவிக்கொண்டிருந்தான். நம் சிங்கத்தை இச் சிற்றெறும்பு கொன்றிருக்க முடியாது. வேழநாட்டு

ப. உ. சண்முகம்

வேந்தன் ஆட்கள்தான் கொன்றிருக்கவேண்டும்." என்றான் மார்த்தாண்டன்.

"அப்படியானால் வேழநாட்டான் வாரிசைக் கண்டதுண்டமாக வெட்டி அரசனுக்கு அனுப்பிவைப்போம்" என்றான் ஒருவன். கூட்டத்தில் பல ஆமோதிக்கும் குரல்கள் எழுந்தன.

"பாலகனை வெட்ட எனக்குப் பிரியமில்லை"

"இரக்கம் காட்டுகிறீர்களா"

"பாலைவனத்தில் நீர் ஊற்றுத் தோன்றினாலும் தோன்றும். ஆனால் என் நெஞ்சில் இரக்கம் தோன்றாது.

இந்தச் சிறுவனை வெட்டுவதைவிட இவனைக் கொண்டே மன்னனைக் கொல்லவேண்டும். நம் தலைவனைக் கொன்ற பாதகனை அவன் மகனைக்கொண்டே சாகடிக்கவேண்டும்" என்றான் மார்த்தாண்டன். அனைவரும் ஏற்றனர். பிணம் சவக்குழி சேர்ந்தது. மார்த்தாண்டன் கள்வர் தலைவனானான்.

வேங்கி நாட்டு வாரிசு தேன்மொழி வேழநாட்டு அரண்மனையில்—வேழநாட்டு வருங்கால வேந்தன் கள்வர் குகையில்—வேங்கி நாட்டு இராணி கள்வர் குகைச் சிறையில்! ஆண்டுகள் பதினைந்து உருண்டோடின. வேழநாட்டு வாரிசின் பெயரையே மாற்றி 'அதிகமான்' என்று பெயரிட்டுவிட்டான் மார்த்தாண்டன். வில், வாள் பயிற்சி பெற்றான் அதிகமான். நூல் ஏணி ஏறுதல், கயிறு பிடித்துத் தாண்டல் முதலிய கலைகளைக் கற்றான். பகற்பொழுதில் பலர் உதவி கொண்டு சிறு ஓலைச் சுவடிகளைப் படிக்க முயன்றான். இவன் படிப்பதற்காகவே ஓலைச் சுவடிகளைக் கொண்டுவந்து தந்தனர். கற்றான். காலம் அவனைக் காளையாக்கியது. பதினைந்து ஆண்டுக்காலம் மார்த்தாண்டனின் நேரடிப் பார்வையில் வளர்க்கப்பெற்ற அதிகமான் அவனது ஆசைக்கும் அன்புக்கும் ஆளானான். மேலும் வயோதிகத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் மார்த்தாண்டனுக்குச் சரியான வாரிசாக வளர்ந்து இருந்தான் அதிகமான்.

ஆனால் என்ன காரணத்தாலோ அதிகமான் அதிகமாகக் கொள்ளைகளுக்குப் போவதில்லை. போனாலும் பிறரைத் துன்புறுத்துவதில்லை. மார்த்தாண்டன் இவன்மீது வைத்துள்ள பற்றுதல் காரணமாகக் கூட்டத்தினர் அனைவரும் மரியாதை தந்தனர். அந்தக் கள்ளர் கூட்டத்திலேயே செல்வாக்குப் பெற்றான்.

வேழநாட்டு வேந்தன் தேன்மொழியை மிகச் செல்லமாகத் தன் சொந்த மகள்போல் வளர்த்தான். பாசம் அவனையும்பற்றியது. பால் மணம் மாருத பருவமுதல் பார்ப்போரைச் சிலையாக்கும் சிங்காரத்தோற்றம் பெற்றுச் சிரித்து ஆடிப்பாடி மகிழ்விக்கும் ஆரணங்காக மாறும்வரை 'தேன்மொழியை' வளர்த்தவனல்லவா?

தேன்மொழியின் சுவையான பேச்சுத்தான் மன்னனின் மனக்கவலையையே மாற்றியது. வேழநாட்டு அரண்மனைக்கே தேன்மொழி நிலவானாள். தனது இனிய குரல்கொண்டு ஏழிசை எழுப்பி அரண்மனையின் அந்தப்புரத்தே வீசும் காற்றெல்லாம் இசை மணக்கச் செய்தாள். இசைக்கலையோ அன்றிச் சதங்கை ஒலியோ, இல்லையேல் சிரிப்பின் ஒலியோ கேளாத நேரமில்லை எனலாம்.

திலகவதி சிறைப்பட்டுப் பதினைந்து ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இதற்கிடையே அவள் தப்பச்செய்தமுயற்சிகளெல்லாம் முறிந்துவிட்டன. பயங்கரச் சிறைக்குள் அகப்பட்ட தனக்கு விடுதலை கிடைக்குமென்ற நம்பிக்கையையே இழந்துவிட்டாள். பெருமூச்சாலும், பெருகி வழியும் கண்ணீராலும் பொழுதெல்லாம் கழித்தாள். வேங்கிநாட்டு இராணி, கள்ளர்கள் குகையில் ஆண் உடையில் வாடித்தவித்தாள்.

தேன்மொழியின் வேண்டுகோள் எதனையுமே மறுத்திடாத வேழநாட்டு வேந்தன் அவள் குதிரைச் சவாரி செய்து பழகவிரும்பியதால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். அவளும் பழகினாள்.

ஓர்நாள் அரண்மனைத் தோட்டத்தைவிட்டு வெளியில் செல்லவிரும்பினாள். மன்னனும் வீரர்கள் சிலரோடு சென்று விரைவில் திரும்பி வந்துவிடும்படி கூறினான். சில வீரர்கள் பின்தொடரப் புறப்பட்டாள். நகரமக்களெல்லாம் கண்டு வியந்தனர். நகர் தாண்டினாள். வேடிக்கையாகக் குதிரையைத் தட்டிவிட்டாள். அது அதிவேகமாக ஓடியது. வீரர்கள் எவ்வளவோ முயன்றும் தேன்மொழியைப் பிடிக்க முடியவில்லை. இறுதியாக அவர்கள் கண்களிலிருந்தே தேன்மொழி மறைந்துவிட்டாள். வீரர்கள் அவளைத் தேட ஆரம்பித்தனர்.

காற்றைக் கிழித்துக்கொண்டு பாய்ந்து சென்ற அப்பைங்கிளி காட்டின் நடுவே வந்து திரும்பிப்பார்த்தாள். தான் தனித்துவிட்டதை உணர்ந்தாள். இலேசாகச் சிரித்துவிட்டுத் தண்ணீர் கிடைக்குமா என்று தேட ஆரம்பித்தாள். அருவி ஒன்று காணப்பட்டது. நெருங்கினாள். இறங்கினாள். தன் மலர்க் கரங்களால் தண்ணீரை அள்ளிப் பருகினாள். திரும்பினாள்... திகைத்து நின்றாள். பாய்ந்து வரும் அம்பினும் கூரிய இரு கண்கள் தன்னைப் பார்ப்பதைக் கண்டாள். இருமுறை அவள் இமைகள் மூடித் திறந்தன. ஆரணியத்தினிடையே ஓர் ஆணழகன்! சிறிது நேரம் உற்றுப் பார்த்தாள். அதற்குமேல் அவளை நாணம் பற்றிவிட்டது. குனிந்த தலையோடு தன் குதிரையை நெருங்கினாள். குதிரையின் அருகே அக்குமரன் நிற்கக் கண்டாள். ஏறிட்டு இவள் பார்த்தாள். வேரிட்ட மரம்போல் நிற்கும் அவன் பார்வை, பாவையை நிலம் நோக்கச் செய்தது. மின்னலைக் கண்டது போல் மிரண்டு அவள் நிற்கக்கண்டான், இன்

ன்து செய்வதென்றறியாத 'அதிகமான்'

கன்னியின் கண்கள் பாய்ச்சிய காந்த ஒளிகண்டான், கற்சிலையாகி விட்ட குமரன் அதிகமான். வானத்து நிலவுதான் கானகத்துக்கு வந்துவிட்டதோ என்று எண்ணினான். செந்தாமரையின் வண்ணத்தை வாரிப் பூசிக்கொண்டவளோ, அன்றி ரோஜா இதழ்களைப் போர்த்திக்கொண்டவளோ என்று அவன் வியந்தான்.

இளைஞர்கள் கண்கள் சந்தித்தால் இதயத்தில் இன்பத்தாகம் ஊறக்கேட்பானேன். இந்த இன்ப ஊற்று, சுரக்க ஆரம்பித்தால் எல்லோரும் ஊமையராகிவிடுகின்றனரே! உருவமோ அன்றி ஒலியோ இல்லாத மொழியில் கண் வழியே காதலர்கள் பேசும்போது வாயால் வீணாகப் பேசுவானேன் என்று எண்ணுகின்றனர் போலும். கண்களைவிடச் சிறந்த சிற்பக் கலைஞன் இல்லை என்று சொல்லலாம். காண்பவைகளை விரைவில் செதுக்கி உள்ளத்தில் பதிய வைத்துவிடுகின்றது. தன் எதிரில் நிற்கும் நிலவின் உருவை அவன் செதுக்கித் தன் உள்ளத்தில் வைப்பதற்குள்ளாக அந்த ஏந்திழையாள் அவன் உருவை அவள் தன் உள்ளத்தில் பதிய வைத்துவிட்டாள்.

நெடுநேரம் மௌனமாகவே காலங்கழித்தனர். அந்த அமைதி யைக்கலைத்தது தேன்மொழியைத் தேடி அலையும் வீரர்கள் ஊதும் சங்கொலி. தேன்மொழி அதைக் கேட்டுத் தன் குதிரையை நெருங்கினாள். அதிகமான் நெடுமூச்சு விட்டவாறு நின்றான். அவள் புரவிமீதும் ஏறிவிட்டாள். பேச வேண்டுமென்று இருவர் உள்ளத்திலும் ஆசை இருந்தது. யார் முதலில் எதைப் பற்றிப்பேசுவதென்று தெரியாது திகைத்தனர். கடைசியாக அதிகமான் துணிந்தான்.

"வழி தவறி வந்துவிட்டீர்களா" என்றான்.

"ஆமாம்." என்றாள் அந்த ஏந்திழை.

"யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

"வேழநாட்டு இளவரசி பெயர் தேன்மொழி".

"தேன்மொழி!"

அவன் தன் பெயரைச் சொன்னது அவளுக்குத் தேனாக இனித்தது. ஆனால் அதற்குள் நாணம் அவள் வாயை அடைத்துவிட்டது. வீரர்களின். சங்கொலி நெருக்கத்தில் கேட்க ஆரம்பித்தது. தேன்மொழி மெள்ளப்போக ஆரம்பித்தாள். இவன் சிலையாகி நின்றான். அவள் அவன்மீது புன்னகையை வீசிவிட்டுப் புறப்பட்டுவிட்டாள்.

(தொடரும்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

னுடைய நாடோடிக் கூட்டத்தையும், இங்காவது, அவர்கள் நாட்டிலாவது சந்தித்தால்? சந்தித்துக் கடைசியாக ஒருமுறை முயன்று அவர்கள் இடுப்பு, தொடை முறிய அடித்தால்... ஆம்......நாம் உயரமான இடத்தில் கூடவேண்டும். பிறகு... (திடமாக) ஆம் அப்படித்தான் செய்யவேண்டும். இது நடந்தே தீரவேண்டும் (ஸ்டூல்மேல் உட்கார்ந்து கதவில் முதுகைச் சாய்த்துக்கொண்டு நினைக்கிறான்) ஆனால் அதற்குப்பின்... அதுதான சங்கடமான காரியம். ஒருவேளை நான் கனவு கண்டேனே, அதை உண்மையில் நடப்பிக்க என்றால் இயலுமா? குத்ரம் ஞானஸ்னனம் பெற்றான். அவனுடைய டேனிஷ் மக்களும் கிறிஸ்தவர்களாய் ஆனார்கள். வேசெக்ஸின் மக்களும், சுகமாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து வருகிறார்கள். இப்படியெல்லாம் என் கனவில்......மேலும் அவர்கள் கிழக்கிலும், வடக்கிலும் அமைதியாக ஆட்சிபுரிவதாகவும், அவர்கள் வர்த்தகத்திலும், சட்டம் இயற்றுவதிலும் சிறந்தவர்கள் எனப்படுவதால், அவர்கள் தங்கள் சொந்தச் சட்டப்படி அப்பாகத்தை அமைதியாக ஆள்வதாகவும், நான் தெற்கிலும், மேற்கிலும் உள்ள சாக்சன் இனத்தினரின் நாட்டை ஆண்டு வருவதாகவும் கண்டேனே. அப்படியானால் அந்தக் கனவை நனவாக்கவேண்டுமே......அதற்கேற்ற சக்தியைப் பெறமுடியுமா என்றால்? ஆம். நான் கடுமையாகப்போரிடவேண்டும். ஆனால் சமாதானத்துக்காகவும் நான் கடுமையாகமுயற்சிக்கவேண்டும். அப்படியே ஆகட்டும். (இடையனும் அவன் மனைவியும் பேசிக்கொண்டே உள்ளே வருகின்றனர்.)

இடையன்:- இம்ம்ஸ் (மூக்கைச் சுளித்து) என்ன நாற்றம் இது.

இ—ம:- ஏதோ தீய்ந்துபோகிற நாற்றம் — ஐயோ என் ரொட்டிகள்! (நெருப்பண்டை ஓடுகிறாள்)

ஆல்:- (திடுக்கிட்டுக் குதித்தெழுந்து) ரொட்டிகள்! நான் மறந்துவிட்டேன். தீய்ந்துவிட்டனவா?

இ—ம:- (அவற்றைக் கோபமாக எடுத்து) ரொட்டிகள்! தீய்ந்து போயின. கரிபோல் தீய்ந்து போயின எல்லாம்.

ஆல்:- மன்னித்துக்கொள் அம்மா. நான் மறந்துவிட்டேன்.

இ—ம:- ஒன்றுக்கும் உதவாத சோம்பேறி மனிதா, அவை தீய்ந்துபோகும்போது ஏன அவற்றைத் திருப்பிப் போடவில்லை. இதோபார், இவை சூடாக இருக்கும்போதேமகிழ்ச்சியோடு இவை எல்லாவற்றையும் யும் தின்றுவிடு. உம்! (ஆல்பிரட்டின் தோள் பிடித்து ஆட்டுகிறாள் கோபமாக)

இடையன்:- மனையாளே, மனையாளே?...(அவள் ஆல்பிரட்டை

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

விடாமல் ஆட்டிக்கொண்டிருக்கிறாள்.)

ஆல்:- பொறுமையாயிரு, பொறுமையாயிரு அம்மா (அவளுடைய கைப்பிடியிலிருந்துதானே, விலக்கிக்கொள்ளுகிறான்)

இ—ம:- (இன்னும் கோபமாக) நீ ஓர் கோமாளி. கடைந்தெடுத்த சோம்பேறி. இப்படிப்பட்ட பயனற்ற கொலைபாதகன் — இங்கிலாந்தில் எப்போதும் இருந்ததில்லை. (எட்கார் வருகிறான். இரண்டு படையதிகாரிகளும் வருகின்றனர் ஒரு சிறு மூட்டையுடன். அவர்கள் இடையனையும் அவன் மனைவியையும் தூரமாகத் தள்ளிவிட்டு அரசன் ஆல்பர்ட்டிடம் போய் நிற்கின்றனர். எட்கார் விளக்கம் கூற முயல்கிறான். ஆனால் அவனுடைய தாயோ காதுகொடுக்க இயலாத கோபத்தோடு இருக்கிறாள்.)

எட்:- (அவள் உடையை இழுத்து) அம்மா, அம்மா.

இ—ம:- (அவன் மேல் கோபங்கொண்டு) ஏய் நீ எங்கே— போயிருந்தாய், எதற்கும் உதவாத பயலே? நான் வேலியைச் சரிபார்க்கச் சொன்னேனே, இப்போ அந்தப் பன்றிகள் எல்லாம் வேலியை முட்டித் தள்ளி நாசம் செய்கின்றனவே ஆ—ஆ ஐயோ மிகக் கேவலம்! மிகக் கேவலம். (பெஞ்சின் மேல் சாய்ந்து முகத்தை முக்காட்டுத் துணியில் மறைத்துக்கொண்டு அழுகிறாள்)

எட்: (இன்னும் முயன்று) அம்மா, அம்மா அரசர்—இவர் நமது அரசர் அம்மா.

இ:- ஆ! என் பிரபுவே, ஆல்பிரட் அரசே, வேசெக்ஸின் காவலர் ஆல்பிரட் அவர்களே! (முழங்கால் படியிடுகிறான்.)

இ—ம:- (முணுமுணுத்துப் புலம்பிக்கொண்டே) என்ன புத்தி கெட்டதனம் இது? என்ன இது எட்கார்?

ஆல்:- இல்லை அம்மா. நான் உண்மையாக உங்கள் அரசன் ஆல்பிரட்தான்.

இ—ம:- ஆ! அரசே, ஐயோ அரசே! பாவி, பிரபுவே நான் பாவி. (கை கூப்பி முழங்கால் படியிட்டுப் புலம்புகிறாள்)

இ:- பிரபுவே காப்பாற்றுங்கள்; எங்களைக் காப்பாற்றுங்கள்.

1ம் இராணுவ அதிகாரி:- (கடுமையாக) அரசரைக் கேவலமாய்ப் பேசிவிட்டாய் அம்மா.

ஆல்:- (புன்முறுவலுடன்) நல்லது நண்பா, வேசெக்ஸின் சட்டம் இப்படிப்பட்ட தவறு பற்றி, என்ன கூறுகின்றது சொல்லும்.

1ம் இரா-அ:- 'அரசனை இழித்துப் பேசியவரின் நாவைத் துண்டிக்க வேண்டும்' என்று நமது சட்டம் கூறுகிறது.

2ம் இரா-அ:- ஆனால் இந்த அம்மாளின் நாவு காப்பாற்றப்படலாம். அதற்குப் பதிலாகக் கடுமையான அபராதம் விதிக்க வேண்டும்—நீதிபதி அனுமதித்தால்.

இ-மனைவி:- ஐயோ என் பிரபுவே, பிரபுவே.

ஆல்:- எழுந்திரு அம்மா, பயப்படாதே; உன் நாவைத் துண்டிக்கச் செய்யவுமாட்டேன். அபராதம் விதிக்கவுமாட்டேன். உங்கள் ரொட்டிகள் தீய்ந்துபோகச் செய்துவிட்டேன். உன் மன்னிப்பைக் கோருகிறேன். நீ மன்னித்தால் நான் மன்னிக்கிறேன்.

இடை:- (மனைவி எழுந்திருக்க உதவுகிறான்) அவள் உம்மை அறிந்திருக்கவில்லை பிரபுவே.

ஆல்:- ஆனாலும் எனக்குப் புகலிடம் தந்தார். இது உண்மையிலேயே தாய்மை உள்ளத்தைக் காட்டுகின்றது. அவர் எனக்கு உணவு தந்தார். ஆனால் நான் அந்த உணவை மாற்றி, என் நண்பர்கள், காட்டில் டச்சுக்காரத் திருடனைக் கொன்று அவனிடமிருந்து கைப்பற்றிய புதிய மாமிசம், முட்டை, பீன்ஸ், ரொட்டி இவைகளை நாம் அருந்தலாம் என அழைக்கின்றேன் உங்களை. (இடையன் பக்கம் திரும்பி) நாம் எல்லோரும் சேர்ந்தே இனி உழைக்கவேண்டும். நீயும், நானும் இதோ இருக்கும் என் நண்பர்களும் இந்த... அத்தனை மக்களும் சேர்ந்தே காரியமாற்றவேண்டும். உங்கள் சதுப்பு நிலத்தில் ஓர் கோட்டை கட்டவேண்டும். நிலத்தைத் தோண்டிச் சுவர்கள் எழுப்பி, பெரிய மரங்களைவெட்டி அவற்றைக்கொண்டு கட்டிப், பெரிய பலமான கோட்டை மதில் உண்டாக்குவோம். நானும் சாமர்செட்டின் வீரர்களும் அதிலிருந்து புறப்பட்டு டென்மார்க்கு நாட்டினரை இன்னுமொரு முறை தாக்குவோம். அவர்களைக் கலங்கவைக்கவேண்டும்; அவர்களை அலைகழிக்கவேண்டும். அவர்கள் ஓய்வு பெறவிடக்கூடாது. சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளும் வரை அவர்களைச் சும்மாவிடக்கூடாது.

இடை:- சமாதானமா பிரபு? வேசெக்ஸில் மறுபடியும் சமாதானம் இருக்க நேருமா?

ஆல்:- ஆம். நீதியான சமாதானம். ஓர் மாபெரும் நாட்டை உண்டாக்கப் போராடுவோம். அந்த நாட்டிலே டேனிஷ்காரர் சகோதர பான்மையுள்ளவர்களாய் வாழச் செய்யவேண்டும். அவர்கள் சண்டைக்கிழுப்பார்கள் என்ற பயம் எனக்கிருப்பினும், எப்படியும் அவர்கள் சகோதரபான்மையுள்ளவர்களாய் ஆவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு. நல்ல சட்டங்கள் இயற்றவேண்டும். வறியவர்கட்கும் செல்வர்கட்கும் சரியான நீதி வகுக்கவேண்டும். பள்ளிகள் பல தோன்றச் செய்யவேண்டும். தொழிலாளர்களுக்குத் தொழில் வளம் செய்துதரவேண்டும். நம்நாட்டுப் பயிர்த்தொழில் செம்மையடையச் செயல் புரியவேண்டும். என்னுடன் சேர்ந்து உதவுவீர்களா தோழர்களே?

எல்லாரும்:- அப்படியே செய்வோம், அப்படியே செய்வோம்.

ஆல்:- சரி இப்போது இரவு ஆகாரத்தை அருந்தலாம் (மேசையை முன்னுக்கு இழுத்து வைத்துக்கொண்டு அரசனும் இராணுவ அதிகாரிகளும் அமருகிறார்கள்.)

இ-மனைவி:- (புன்முறுவலுடன் உணவும் பானமும் பரிமாறுகிறாள்) சாப்பிடுங்கள் பிரபு. வெறும் வயிற்றோடு பெரும் நாட்டைக் கட்டமுடியாது.

இரா-அ:- (பானக் குவளைகளை இடது கைகளால் தூக்கிப் பிடித்துக்கொண்டு) உரம் பெறுவோம். நலம் பெறுவோம், நாட்டை நமதாக்குவோம் பிரபு.

*

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.